தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

JUNE 2013

திருவள்ளுவராண்டு 2044

(வைகாசி - ஆனி)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

83

தமிழியல்

JOURNAL OF TAMIL STUDIES

83

திருவள்ளுவராண்டு 2044, வைகாசி- ஆனி

ஜூன் (JUNE) 2013

Articles in the Journal of Tamil Studies do not necessarily represent either the views of the International Institute of Tamil Studies or those of the Board of Editors

BOARD OF EDITORS

Dr. F. GROS
Former Director, French Institute of Indology, Pondicherry.

Dr. G.L. HART
Dept. of South and South East Asian Studies, University of California, U.S.A.(Retd.)

Dr. A. VELUPILLAI
Former Professor of Tamil, University of Jaffna, Srilanka.

Dr. S.N. KANDASAMY
Former Professor of Tamil, Tamil University, Thanjavur.

Dr. Pon. KOTHANDARAMAN
Former Vice-Chancellor, University of Madras, Chennai.

Editor-in-Chief
Dr. G. VIJAYARAGHAVAN

Associate Editor
Dr. M. VALARMATHI

OUR CONTRIBUTORS

Dr. V. Gnanasundaram
Deputy Director (Retd.), CIIL,Mysore.
"Anand Arathi Illam", 10-B, 5th Main,
Brindavan Extension, 1st Stage,
Mysore - 570 020.

Dr. K. Mohan
Lab Assistant
Azhagappa Arts College
Karaikudi - 630 003
Sivagangai Dist.

Mr. Sanmugaraja Srikanth
Assistant Professor
University of Jaffna
Sri Lanka.

Dr. T. Kamali
Head of the Linguistics Department
Mother Teresa's Women University
Attuvampatti Campus
Kodaikanal - 624 101

Dr. V. Rajesh
Associate Professor
Centre for Studies in Social Sciences
Kolkata

Dr. J.B.P.More
Professor
Inseec, Paris
Member Institute for Research
in Social Sciences and Humanities

K.G. Sheshadri
Ex- Proj. Asst II Sc
Plot No. 30, 'Lakshmi Nivas'
Railway Colony, R.M.V. Extension
Lottegollahalli, Bangalore - 560 094

Dr. S. Manoharan
Head in Charge
Department of Lexicography
Central Institute of Classical Tamil
IRT Campus, Tharamani, Chennai - 600 113

Dr. M.A. Bhagirathi &
Mrs. Harini Nagarajan
Head of the Music Department
Quees Mary's College
Chennai - 600 005

CONTENTS

1. ஏளு ஆண் மக்களுமு ஒரு பொட்ட பொண்ணுமு- ஒரு பழங்குடியின ஏரவல்ல மொழிக்கதை — வ. ஞானசுந்தரம் — 1

2. தொல்காப்பியக் கருப்பொருள் மயக்கத்தில் பூ? மா? — க. மோகன் — 23

3. மொழியும் பண்பாடும்: திராவிட உறவுமுறைச்சொற்களைஅடிப்படையாகக் கொண்ட மானிடவியல்ஆய்வு — சண்முகராஜா சிறிகாந்தன் — 30

4. பெரியாழ்வார் பாசுரங்களில் கேட்பொலி செவிப்புலக் காட்சிப் படிமங்கள் — தி. கமலி — 41

5. Intellectual Awakening in Late 19th Century Tamilnadu: A Study of P. Sundaram Pillai — V. Rajesh — 49

6. Recovering Tamil Scholars: Indo - French Intellectual Interaction in Pondicherry During The Colonial Period — J.B.P. More — 61

7. Preternatural Descriptions of Animal Behaviour in Ancient Tamil Literature — K.G. Sheshadri — 83

8. Basic Colour Terms and Cultural Distinctiveness: A Case Study of Tamil — S. Manoharan — 87

9. Presentation of South Indian Music Concerts - A Study — M.A. Bhagirathi — 113

ஏழு ஆண் மக்களுமு ஒரு பொட்ட பொண்ணுமு - ஒரு பழங்குடியின எரவல்ல மொழிக்கதை

வ.ஞானசுந்தரம்

அறிமுக உரை

கோயம்புத்தூர் மாவட்டத்தின் பொள்ளாச்சி-உடுமலைப்பேட்டைத் தாலுக்காக்களில் நீண்டு காணப்படும் ஆனைமலைப் பகுதியில் வாழ்ந்து வரும் பழங்குடியினர் எரவல்லர். இவர்களுடைய தாய்மொழியான எரவல்ல மொழி வழக்கில் உள்ள ஒரு வாய்மொழிக் கதையே இக்கட்டுரையின் பொருளாக அமையப் பெற்றுள்ளது. எரவல்ல மொழி தென்திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பேச்சு வழக்கில் மாத்திரமே உள்ள ஒரு பழங்குடியின மொழியாகும்[1].

0.1. தமிழகத்தில் வாழும் பழங்குடியினர் பொதுவாக, (1)தனித்தன்மை கொண்ட பழங்குடி மொழிவகை ஒன்றைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பர், அல்லது (2) தமிழ்மொழியின் பேச்சு வழக்கு ஒன்றினைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பர், அல்லது (3) சிறுபான்மையினர் மொழிகளில் ஒன்றான தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளின் பேச்சு வழக்கு ஒன்றைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பர். இவர்கள், பொதுவாக இருமொழியாளர்கள் (bilinguals). தமிழகத்தில் வாழும் 36 பழங்குடியினரில் சில பழங்குடியினர், தமிழகமேயன்றிக் கேரளம், கருநாடகம் போன்ற மாநிலங்களின் நிலப்பரப்பிலும் வாழ்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் தாம் வாழும் நிலப்பரப்பினைக் *கேரளம்-தமிழகம்* என்றோ, *கருநாடகம்-தமிழகம்* என்றோ மாநில எல்லைக் கோடு கொண்டு பிரித்துப்பார்ப்பதில்லை. பழங்குடிவகையினரில் சில வகையினரது பெரு நிலப்பரப்பு, இந்தியா மொழிவாரி மாநிலங்களாக 1956இல் பிரிக்கப்பட்டபோது துண்டாடப் பட்டு, ஒரு பகுதி ஒரு மாநிலத்திலும் இன்னொரு பகுதி இன்னொரு மாநிலத்திலும் சென்று சேர்ந்துள்ளன. தமிழகத்தில், கேரளத்தில், கருநாடகத்தில் எனத் தொடர்ச்சியாக உள்ள நிலப்பரப்பில் உள்ள ஒரேவகைப் பழங்குடியினரால் பேசப்படுகின்ற தாய்மொழிகள் சில உள. எடுத்துக்காட்டாக, "*பெட்டகுறும்பர்* என்ற பழங்குடியினர், தமிழகத்தின் கூடலூர் மலைப்பகுதியைச் சார்ந்த முதுமலை வனவிலங்குகள் சரணாலயப்பகுதியிலும், *ஊராளிக்குருமன்* என்ற பெயரில் கேரளத்தின் மானந்தவாடிப்பகுதியைச் சார்ந்த வயநாடு வனவிலங்குகள் சரணாலயப் பகுதியிலும், *பெட்டகுறுபர்* என்ற பெயரில் கருநாடகத்தின் ஹெக்கடதேவன கோட்டைப்பகுதியில் உள்ள பந்திப்பூர் வனவிலங்குகள் சரணாலயப்பகுதியிலும் வாழ்கின்றனர். குறும்பர் பழங்குடி இனம் சார்ந்த இவ்வனைவரும் பேசுவது ஒரே பழங்குடியின மொழிதான்"[2] (Emenau 1969, Gnanasundaram, Perialwar, Rangan, 2012). இது போலவே, எரவல்லன் என்பவரும் தமிழகத்தில் வாழும் 36 அட்டவணைப் பழங்குடியினங்களில்

ஒரு பழங்குடியினர் ஆவர். "இரவல்லர், கோயம்புத்தூர் மாவட்டத்தின் பொள்ளாச்சி-உடுமலைப்பேட்டைத் தாலுக்காக்களில் நீண்டு காணப்படும் ஆனைமலைப் பகுதியில் வாழ்ந்து வரும் பழங்குடியினர் ஆவர். எரவல்லப்பழங்குடியினரது வாழுமிடங்கள், தமிழ்நாட்டுப்பகுதியிலிருந்து கேரள மாநில எல்லை வரை உள்ள ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பில் உள்ளன. கேரளத்தில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள வெள்ளிமேடு, கன்னிமாரி, செம்மணாம்பதி போன்ற கிராமங்களில் வாழ்கின்றனர். கேரளத்தில் உள்ள எரவல்லர்கள் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர் (Saraswathi,2002)"[3]. ஆனால், தங்களது பூர்வீகம் பற்றி இவர்கள் எதுவும் அறியாதவர்களாக உள்ளனர்.

0.2. தமிழ்ப்பேரகராதி *இறவுளர்* என்ற பெயரில் இவர்களைக் குறிப்பிடுவதோடு அதன் பொருளாகக் 'குறிஞ்சி நில மாக்கள்' என்றும் குறிப்பிடுகிறது (*தமிழ்ப்பேரகராதி:Tamil Lexicon 1982: 363*). எரவலன் எனப்படும் இப்பழங்குடி இனம் *இறவா, இறவுளர், எறவல்லர், எறவாளர், எரவாளர், வில்வேடர், அம்பு வில்வேடர்* என வெவ்வேறு பெயர்களையும் கொண்டுள்ளது. இவர்கள் *கரிநாவிஞ* என்ற பெயரில் தங்களைக் குறிப்பிட்டுக் கொள்கின்றனர். இவர்கள் பேசும் தாய்மொழி இரவல்ல(ம்) என்ற பெயரில் இங்குக் குறிப்பிடப்படுகின்றது.

0.3. இந்த எரவல்லப் பழங்குடியினர் கீன் என்ற அறிஞரின் (Keane) கூற்றுப்படி நீக்கிரிடோ, கொலாரியன் மற்றும் திராவிட இனக்கூறுகளைக் கொண்டுள்ளவர்களாக, குறிப்பாக நீக்கிரிடோ இனக்கூறுகளை அதிகம் கொண்டவர்களாக உள்ளனர். சுருட்டைத் தலைமுடியோடு கருநிறம் கொண்டவர்களாகச் சுமார் ஐந்தரை அடி உயரம் கொண்டவர்களாக உள்ளனர்.

0.4. இவர்கள் அரிசி, கேழ்வரகு, கம்பு போன்ற தானியங்களை உண்பவர்கள். பருப்பு வகைகளையும் காட்டில் உள்ள கிழங்குகள், வேர்கள், கீரை வகைகள் ஆகியவற்றையும் உண்பவர்கள். வீடுகளில் தயாரிக்கப்படும் சாராயத்தைக் குடிக்கின்றனர். நத்தைக்கறியை இவர்கள் விரும்பி உண்பவர்கள் என்பது பின் வரும் நாட்டுப்பாடல் வரிகளால் புலனாகிறது:

"நண்டுச்சாறும் காய்ச்சிகிட்டு
நடு வரப்புலே போற தங்கம்..." (விஜயலட்சுமி, 2008).

0.5. இவர்கள் தாம் வாழும் இடத்தைப் *பதி* என்ற பெயராலும் தாம் வாழும் வீட்டினைக் கூரை என்ற பெயராலும் குறிப்பிடுகின்றனர். *பதி* என்ற சொல் பழந்தமிழ்ச் சொல். சங்க இலக்கியங்களில் இடம்பெறும் இந்தப் *பதி* என்ற சொல் 'ஊர்' என்ற பொருளைச் சுட்டுவதாக உள்ளது. இவர்களுடைய பதிகள் (ஊர்கள்) பெரும்பாலும் காட்டிற்கும் வயல் வெளிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் உள்ளன. உடுமலைப் பேட்டைப் பகுதியில் அமராவதிஅணை கட்டப்பட்டபோது எரவல்லர்களது பூர்வீக ஊர்களான *மூங்கலியடிபதி, பெரியபதி, கும்பப்பர பதி, வலவடி நகர் திட்டு* போன்றவை நீரில் மூழ்க இவர்கள் வேறு 28 ஊர்களில் குடியமர்த்தப்பட்டனர். ஒரு பதியில் சுமார் 15 முதல் 30 கூரை வீடுகள் உள்ளன. இவை மூங்கில், மண், பிரம்பு, புல் போன்றவைகளால் கட்டப்படுகின்றன. 1981 மக்கட்தொகைக்கணக்கெடுப்பின்படி

தமிழ்நாட்டில் எரவல்லர்களின் மக்கள் தொகை 1,109 மட்டுமே. இவர்கள் தங்கள் இனக் குழுக்குள்ளாகவே திருமணம் புரிந்துகொள்பவர்கள் (endogamous). களவு மணவாழ்க்கை இவர்களிடையே காணப்படும் ஒன்று. ஆனால் திருமணத்திற்குப் பிறகு பிறரோடு தொடர்பு வைத்துக்கொள்வதில்லை. மண முறிவும் மறு மணமும் இச்சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பெற்றவை. இவர்களது சமூக அமைப்பு தந்தை வழி சார்ந்தது. தனிக்குடும்ப அமைப்பே பெரும்பாலும் காணப்படுகிறது. ஆண்மக்கள் தங்கள் அண்ணன்தம்பி மனைவிகளுடன் கிண்டல்-கேலி செய்யும் உரிமை கொண்டவர்கள். பெண் மக்கள் தம் தாய் மாமன்களைக்கேலி செய்யும் உரிமை கொண்டவர்கள். ஆண்மக்கள் தங்கள் பரம்பரைச்சொத்தைப்பெறும் உரிமை கொண்டவர்கள்.சகோதரர் உள்ள பெண்குழந்தைகளுக்கு இந்த உரிமை கிடையாது. பெண்கள், ஆண்களுக்குச் சமமான தகுதிநிலையில் இல்லை.

எரவல்லர்களில் பலர் இன்று வேட்டைத்தொழிலை மறந்துவிட்டார்கள். பலர் வயலில் கூலி வேலைசெய்கின்றனர். காட்டில் கிடைக்கும் பொருள்களைச் சேகரித்துக் காண்டிராக்டர்களுக்கு அல்லது காட்டிலாக்காவினர்க்கு விற்பனை செய்கின்றனர். சிலர் காட்டிலாக்காவில் பாதுகாவலர் வேலை செய்கின்றனர். ஒரு காலத்தில் இவர்கள் வில் வித்தை வீரர்களாக வேட்டையாடுவதில் வல்லவர்களாக இருந்துள்ளனர்.

0.6. எரவல்லர்களது பதியின் (கிராமத்தின்) தலைவர் மூப்பன் எனப்படுவார். இது வழிவழியாக வரும் பதவி. ஒவ்வொரு எரவல்ல ஊர்மன்றமும் (village council) மூன்று அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது. 1.மூப்பன் (ஊர்த்தலைவன்) 2. கொட்டுகாரன் (ஊரைக்காவல் காக்கும் காவலர்) 3. தண்டல் காரன் (ஊர்ச்செய்தியை மற்ற ஊர்களுக்கு எடுத்துச்செல்பவன்). எரவல்லர் ஊர் மன்றம், கற்பழிப்பு, திருமணத்திற்குப் புறம்பான உறவு, மணவிலக்கு, திருட்டுத் தொடர்பான பழங்குடியினர் வழக்குகள் அனைத்தையும் தீர்த்துவைக்கும்; ஊர்த் திருவிழாக்களையும் நடத்திவைக்கும்.

கருப்பராயன் மற்றும் கன்னிமார்(ஏழு கன்னிகள்) இவர்களது முக்கிய வழிபாட்டுத் தெய்வங்கள் ஆகும். மூப்பனே வழிபாடுகளைத் தொடங்கி வைப்பவராவார் (Perialwar 1977: 411-415).

0.7. எரவல்லப்பழங்குடிகளின் வாழ்வியல் குறித்த ஆய்வு ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு நூலாகவும் வெளிவந்துள்ளது (விஜயலட்சுமி 2008). எரவல்லர் குறித்து வந்துள்ள முதல் ஆய்வு நூலாக இதனையே குறிப்பிடலாம். ஆனால் எரவல்லர், தங்களுக்குள் தாய் மொழியாகப் பேசிக்கொள்ளும் எரவல்ல மொழி குறித்த மொழி ஆய்வு இதுவரையிலும் எவராலும் மேற்கொள்ளப் பெறவில்லை. இந்தக்கட்டுரையாளர்தான் முதன் முதலாகக் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறை சார்பாக எரவல்லரது தாய் மொழியான எரவல்ல மொழி ஆய்வை மேற்கொண்டு எரவல்ல மொழிக்கூறுகள் பலவற்றைக் கண்டுணர்ந்து எரவல்ல மொழி ஆய்வு (A Study of Eravalla) என்ற தம் நூலில் வெளிக்கொணர்ந்துள்ளார் (Gnanasundaram 2012).

0.8. எரவல்ல மொழியில் உள்ள சில முக்கியமான மொழிக்கூறுகள் இங்கே பட்டியலிடப்படுகின்றன. அவை வருமாறு:

(1) இம்மொழி வகையின் அடிப்படை ஒலிகளாக, அதாவது ஒலியன்களாக (phonemes) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ,க்,ங், ச், ஞ்,ட், ண், த், ப், ம், ய், ர், ல், வ், ள், ற், ன் என்பவை உள்ளன. ஒலிப்புள்ள ஒலியன்களாக (voiced phonemes) க்³(g), ஜ்(j), ட்³(d), த்³(d), ப்³(b) ஆகியவை விளிம்பு நிலை ஒலியன்களாக (marginal phonemes) உள்ளன.

(2) தமிழில்: இலக்கியத்தமிழ் நீங்கலாகக் கன்னியாகுமரிப் பேச்சுத் தமிழ் வழக்கில் மாத்திரம் காணப்படும் *றகரம்* இம்மொழிவகையில் ஓர் ஒலியனாக- ரகரத்திலிருந்து மாறுபட்ட ஒலியனாக உள்ளது.

எடுத்துக்காட்டுகள்: நாற்றி நோக்கு 'முகர்ந்து பார்', மூன்று 'மூன்று', ரங்கறு (ரங்-அற்-அ) ' அவன்/அவள்/ அது தூங்குகிறான்/தூங்குகிறாள்/ தூங்குகிறது, எனத் தமிழில் கூறலாம். (ஆனால், பால் காட்டும் விகுதி இரவல்ல மொழியில் இல்லை). இங்கு, கவனிக்க வேண்டியது பின்வருமாறு: இரவல்ல மொழியில், ற் இரு உயிர்களுக்கு இடையில் வரும்போது அதன் ஒலிப்பு படம், மடம் என்ற தமிழ்ச்சொற்களில் ஒலிக்கப்படும் ட் ஒலியைக்கொண்டுள்ளது. அதாவது தூங்குகிறான்/தூங்குகிறாள்/தூங்குகிறது என்ற பொருள்களைத்தரும் ரங்கறு (ரங்-அற்-உ) என்ற இரவல்ல மொழிச்சொல்லில் உள்ள ற் இன் ஒலி ட் ஒலியைப்போன்றே உள்ளது. முன்பே கூறியது போல, இரு உயிர்களுக்கு இடையே றகரம் தனித்து வரும்போது, இரவல்லத்தில் 'ட் 'என்ற ஒலியைப்பெற்று வருகிறது. ற் இரட்டித்து வரும்போது மாத்திரம் 'ற் 'என ஒலிக்கப்பெறும். இந்த ஒலிப்பு முறைக்கேற்பவே பிரிவு 1 இல் உள்ள வாய்மொழிக்கதையில் எழுத்துகள் இடம்பெற்றுள்ளன. ஒலிப்புள்ள ஒலியன்களான g, d, d, b போன்றவை க், த், ட், ப் போன்ற ஒவ்வொரு தமிழ் எழுத்தின் வலது புறத்தில் 3 இடம்பெற்று அதாவது க்³=g, த்³=d, ட்³=d என உணர்த்தப்படுகின்றன. ஜ்=j வை உணர்த்தும்.

(3) எரவல்ல மொழி வகையில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்ற மூவகைப்பால் பாகுபாடு உண்டு. ஆனால் உயர் திணை- அஃறிணைப் படர்க்கை வினைமுற்றுகள், பால் வேறுபாட்டைச் சுட்டுவதில்லை. எடுத்துக் காட்டுகள் வருமாறு: அய்லு 'அவன்' (சேய்மை), இய்லு 'இவன்' (அண்மை), அனிச்சி/அனித்தி 'அவள்'(சேய்மை),இனிச்சி/இனித்தி 'இவள்' (அண்மை), கவண்டன் 'பழங்குடியினர் அல்லாதவன்', கவண்டச்சி ' பழங்குடியினர் அல்லாதவள்', அத்தனு 'தந்தை', அத்தனுமேரு 'தந்தைமார்', பெண்டதி ' பெண்', பெண்டிமேரு 'பெண்கள்' , எரவான்ரு 'எரவாளர்கள்', பதிங்க 'ஊர்கள்', அய்க்க 'அது'.

நானு ரங்கற 'நான் உறங்குகிறேன்', நானு ரங்கறனா 'நான் உறங்குகிறேனா?' இவற்றில் -அற்- (-அட்- என ஒலிக்கப்பெறும்)நிகழ்கால விகுதியாகவும் -அ- உடன்பாட்டு வினை முற்றில் தன்மை ஏற்கும் விகுதியாகவும் -அன்-வினாக் கொண்ட வினை முற்றில் தன்மை ஏற்கும் விகுதியாகவும் உள்ளன

> நீனு ரங்கடெ'நீ உறங்குகிறாய்', நீனு ரங்கடையா? 'நீ உறங்குகிறாயா?'- இவற்றில் உடன்பாட்டு வினை முற்றில் முன்னிலைக்கான விகுதி -எ எனவும் வினாக் கொண்ட வினை முற்றில் முன்னிலைக்கான விகுதி -ஐ ஆகவும் உள்ளன.

நாங்க ரங்கடம் 'நாங்கள்/ நாம் உறங்குகிறோம்', நாங்க ரங்கடமா?' நாங்கள்/நாம் உறங்குகிறோமா?'-இவற்றில் உடன்பாடு மற்றும் வினாக் கொண்ட வினைமுற்றுகள் இரண்டிலுமே தன்மைப் பன்மை ஏற்கும் விகுதி-அம் என உள்ளது. எரவல்லத்தில் தன்மைப் பன்மையைச் சுட்ட, தமிழ் போல அல்லாது ஒரே வடிவமான நாங்க மாத்திரமே உள்ளது. நாம் என்ற வடிவம் எரவல்லத்தில் இல்லை.

நீங்க ரங்கடெரு 'நீங்கள் உறங்குகிறீர்கள்', நீங்க ரங்கடெரா? 'நீங்கள் உறங்குகிறீர்களா?'-இவற்றில் உடன்பாடு, மற்றும் வினாக் கொண்ட வினை முற்றுகள் இரண்டிலுமே முன்னிலைப் பன்மைக்கான விகுதி -எர் என உள்ளது.

அய்லு/அனிச்சி~அனித்தி/அய்க்க (ரங்க்-அற்-உ) ரங்கடு 'அவன்/அவள்/அது உறங்குகிறான்/உறங்குகிறாள்/உறங்குகிறது'-இவற்றில், அதாவது உயர் திணைப்படர்க்கை ஒருமைப் பெயர்களான *அய்லு*, *அனிச்சி*, *அனித்தி* ஆகியவற்றையும் , அஃறிணைப்படர்க்கை ஒருமைப்பெயரான *அய்க்க* வையும் எழுவாயாகக்கொண்ட வினை முற்றுகளில் பால் காட்டும் விகுதி எதுவும் இல்லை. இவற்றில் உள்ள இரவல்ல மொழி -உ# படர்க்கை ஒருமையை மாத்திரமே சுட்டுகிறது; பால் வேறுபாடு காட்டும் விகுதி எதையும் சுட்டவில்லை. மாறாகத் தமிழ்மொழியிலோ பால் வேற்றுமை காட்டும் (ஒருமை) விகுதிகளாக வினை முற்றுகளில் -ஆன்/ஆள்/அது உள்ளன. இது போலவே இறந்த கால -எதிர் கால வினைமுற்றுகளிலும் பால் வேறுபாடு காட்டும் விகுதி எதுவும் இரவல்ல மொழியில் இல்லை. எடுத்துக்காட்டுகள் வருமாறு:

(இறந்த காலம்) அய்லு/அனிச்சி~அனித்தி/அய்க்க (ரங்கி-இன்-(அ)து>) ரங்கிற்று'அவன்/அவள்/அது-உறங்கினான்/உறங்கினாள்/உறங்கினது'. அதாவது ரங்கிற்று என்ற வினைமுற்று இரவல்லத்தில் எழுவாயாக அவன்/அவள்/அது என்ற எழுவாய்ப்பெயர்களில் எதாவது ஒன்றை ஏற்கும்.

(எதிர்காலம்) அய்லு/அனிச்சி~அனித்தி/அய்க்க-(ரங்க்-உ>) ரங்கு ''அவன்/அவள்/அது உறங்குவான்/உறங்குவாள்/உறங்கும்'

அய்லு/அனிச்சி~அனித்தி/அய்க்க(- ரங்க்-உம்-ஆ>) ரங்குமா ''அவன்/அவள்/அது- உறங்குவானா/உறங்குவாளா/உறங்குமா?'

வேறு விதமாகச் சொல்வதானால், பால் வேறுபாடு, படர்க்கைப் பதிலிப் பெயர்களில் (pronouns) உள்ளன; படர்க்கை ஒருமை,பன்மை ஏற்கும் வினை முற்றுகளில் பால் வேறுபாடு உணர்த்தும் விகுதி எதுவும் இல்லை.

(4) நிகழ்கால-எதிர்கால எதிர்மறை வினையமைப்பு, கன்னட இருள மொழிகள் போல வினை எச்சம் +எதிர்மறை வினை -இ(ல்)ல என்றுள்ளது. தமிழ் மொழியின் அமைப்புப் போலச் செய என் வாய்பட்டு வினையெச்சம் (infinitive) + எதிர்மறை வினை -இல்லை என்றில்லை.

எடுத்துக்காட்டு: தின்று+ இல்ல> தின்றில்ல 'உண்ணவில்லை'(நிகழ்-இறந்த கால எதிர்மறை வினை), தொளாவி+இ(ல்)ல> தொளாவி(ல்)ல 'தேடவில்லை'(நிகழ்-இறந்த கால எதிர்மறை வினை).

(5) இருள மொழியிலுள்ளது போல மொழிமுதல் உயிர் இழப்பு (apharisis)(Perialwar 1977) இரவல்லத்திலும் உள்ளது. எடுத்துக்காட்டுகள் வருமாறு: உறக்கம்>ரக்கம் 'தூக்கம்', உடைந்து> :டெஞ்சு, இளையவள்> லயகாரி 'தங்கை', இராட்டு>ராட்டு 'தேனடை'.

(6) மொழிமுதல் மெய்யொற்றுகள் இரவல்லத்தில் காணப்படுகின்றன. க்யாங்கு 'கிழங்கு', க்தாரு 'அழு', ம்ராமு 'மரம்'.

(7) மூலத் திராவிட ★ழகரம் சில சொற்களில் வகரமாக, சில சொற்களில் ளகரமாக, சில சொற்களில் ய கரமாக, மாற்றத்திற்கான விதிகள் தரப்படுத்த முடியாத முறையில் மாற்றம் பெற்றுள்ளன. கோழி> கோகி 'பெட்டைக்கோழி', கொழுந்தன்> கொகுந்தன்/ கொவுந்தன்/கணவனின் சகோதரன்', குழல்> கொவலு 'துளை கொண்ட இசைக்கருவி', கொழுப்பு> கொளுப்பு, கிழங்கு> க்யாங்கு.

(8) ஒகரம் எகரமாகச் சில சொற்களில் மாற்றம் பெற்றுள்ளது. செடி> சொடி 'தாவரம்'.

(9) கடி, நடி, படி போன்ற நிகழ்கால வல்-வினைகள் (strong verbs) கொண்டுள்ள கால உருவாக்க விகுதி (tense formative suffix), இரவல்ல மொழியில் பழந்தமிழில் உள்ளது போல -ப்ப்- ஆக உள்ளது; தற்காலத்தமிழில் உள்ளது போல -க்க்- ஆக இல்லை. கடி-ப்-அற்-அ-ஆ> கடிப்படையா? 'நீ கடிக்கி(ன்)றாயா?', பூவே கெட-ப்-இல்ல> பூவே கெடப்பில்ல ' பூக்கள் எதுவும் கிடைக்கவில்லை'.

(10) உறுதிப்பட்டை வெளிப்படுத்தும் இரவல்லத் துணை வினை கேஞ்சு- (~மாற்று இணை வடிவங்களான காஞ்ச்-/காய்ந்த்- போன்றவற்றுடன்) ரங்கி 'உறங்கி', பாடி போன்ற வினைஎச்சங்களுக்குப்பின் இடம்பெற்று ரங்கி காஞ்சு, பாடிகேய்ந்து எனக் கூட்டுவினை வடிவங்களாக மாறி ரங்குன 'நான் உறங்கினேன்', பாடுன 'நான் பாடினேன்' போன்ற எளிய இறந்தகால வினைவடிவங்களின் பொருளை, (உறுதிப்பட்டோடு) தருகின்றன. பொதுவாக, எரவல்லர் அனைவருமே எளிய இறந்தகால வினை வடிவங்களைக்காட்டிலும் ரங்கி காஞ்சு, பாடிகேய்ந்து போன்ற கூட்டு வினை வடிவங்களை மொழிவதையே இயல்பாகக்கொண்டுள்ளனர் போலத்தோன்றுகின்றது.

வினையெச்சத்திற்குப் பிறகு வரும் உறுதிப்பாட்டு இறந்தகால வினைவிகுதி வடிவங்களான கேஞ்சு/கேய்ந்து முதலியவற்றிற்கு இணையான தமிழ் வடிவங்கள்-செல், சேர், இரு, விடு முதலியனவாகும். எரவல்ல வடிவம்-கேஞ்சு மற்றும் அதன் இதர இணை வடிவங்களான காஞ்சு/கேய்ந்து/காய்ந்து முதலானவற்றில் இடம்பெற்றுள்ள மொழிமுதல் #க்- தமிழ், மலையாளம், தெலுங்கு போலன்றி மாற்றம் பெறாமல் க்-ஆகவே உள்ளது. தமிழ், மலையாளம்,

தெலுங்கு போன்ற மொழிகளில் மொழிமுதல் #க்-#ச்-என மாற்றம் பெற்றுள்ளது. வரலாற்று முறையிலான இந்த மொழி மாற்றம் சகர மாற்றம் எனப்படும் (palatalization) (Burrow 1968). அதாவது காஞ்சு-/காய்ந்து- போன்ற துணைவினை வடிவங்களில் உள்ள மொழி முதல் #க்-, நீலகிரி உயிரியல் நிலப்பரப்பு மொழிகளான (Nilgiris biosphere languages) இருளமொழி போல, ஊராளி மொழி போல மற்றும் கன்னடம் போல மொழி மாற்றம் இல்லாமல் #க்-ஆகவே நிலை பெற்றுள்ளது. மொழி முதல் #க் - #ச்- ஆக மாற்றம் பெறாத இந்த மொழி நிலை, அதாவது ககரம் சகரமாக மாறாக இந்த மொழி நிலையை (non palatalization) வரலாற்று மொழியியல் பாங்கில் கணக்கில் எடுத்துக்கொண்டால் இரவல்ல மொழி, வரலாற்றுக்காலத்திய தமிழ் - கன்னடம் என்ற ஓர் ஒருங்கிணைந்த மொழியமைப்புக் காலத்தைச் சேர்ந்ததாக, தமிழ் என்றும் கன்னடம் என்றும் மொழிகள் பிரியாத காலக்கட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்ற ஒரு கருதுகோளைக் (hypothesis) கொள்வதற்கு வழிவகுக்கிறது.

(11). 70 விழுக்காட்டளவு எரவல்ல அடிப்படைச்சொற்கள், தமிழ் அடிப்படைச்சொற்களுடன் ஒத்துப்போகின்றன; இரண்டும் பொதுவாக உள்ளன. பின் வரும் சில அடிப்படைச்சொற்கள் மலையாளச் சொற்களோடு ஒத்துப் போகின்றன: உரும்பி 'எறும்பு', படிஞ்சரெ /படிஞ்ஞரெ 'மேற்கு', நெலவுளி/ நெலபு3ளி ' கூவுதல்' (Gnanasundaram 2012: chapter 3, 2013.).

(12). இரவல்லமொழியில் உள்ள பின்வரும் சில சொற்கள் பழந்தமிழ்ச் சொற்களாக உள்ளன. பெண்டதி 'பெண்'(தமிழ்ப்பேரகராதி-Tamil Lexicon 1936:3521), வதுக 'மரக்கிளை' (வாது- தமிழ்ப்பேரகராதி: 3591), வரடி ' மலடி' (தமிழ்ப்பேரகராதி:3560), நங்கெ 'அண்ணனின் மனைவி' (தமிழ்ப் பேரகராதி: 2128), நூல்வளி கால்வளி ' பரம்பரை' (தமிழ்ப்பேரகராதி 1936:3560).

(13). இரவல்லர்களின் வாய்மொழி இலக்கிய வகைப்பாடு, குறிப்பிடத்தக்க வகையில் பின் வருமாறு உள்ளது. வாய்மொழிக்கதைகளைத் தாய் மொழியான எரவல்லத்திலும், வாய்மொழிப்பாடல்களை, விடுகதைகளைத் தமிழ் மொழியிலும் வழங்குகின்றனர். இப்போக்கு தமிழகம், கேரளம் என இரண்டு மாநிலங்களிலும் உள்ள எரவாளர்களிடமும் காணப்படுகின்றது. இது மொழியியல் நோக்கில் ஒரு வகையான இருநிலைப்போக்கு (diglossic situation) எனலாம். எடுத்துக்காட்டாகப் பின்வரும் ஒரு விடுகதையைக்காணலாம்.

சத்தமோ நல்ல சத்தம் சுவைக்காகாது
முள்ளோ நல்ல முள்ளு வேலிக்காகாது
பூவோ நல்ல பூவு பூசைக்காகாது- அது என்ன?

வெளிப்படும் இனிமையற்ற சத்தம், வேலி உண்டாக்கப் பயன்படாத, காலில் உள்ள முள், கொண்டையில் உள்ள பூசைக்குப்பயன்படாத பூ- இவை எல்லாமே உள்ளுறை போல, சேவலை உணர்த்துகிறது.

(14). பேச்சு நிலையில் மாத்திரம் உள்ள எரவல்லம் அழிவை நோக்கிச் சென்று கொண்டுள்ள ஒரு மொழிவகை எனலாம். உடுமலைப்பேட்டை அமராவதிப்பகுதி சார்ந்த இந்திராகாந்தி விலங்குகள் சரணாலயப்பகுதியில்

வாழ்ந்துகொண்டிருக்கும் நூற்றுக்கும் குறைவான இம்மக்கள் கூட்டத்தினரில் இரவல்லத் தாய்மொழிப்பயன்பாடு அறிந்தவர்களாக வயதான சில மூத்த பெண்கள் மாத்திரமே உள்ளனர். பெரும்பாலான ஆண்கள் (எல்லாத் தலைமுறையினரும்) தாய் மொழிபேசும் திறன் இல்லாதவர்களாக உள்ளனர். பெண்களில் மூத்த தலைமுறையினரில் சிலரைத்தவிர, நடுவயதினர், இளைய தலைமுறையினர் எவர்க்கும் அவர்கள் தாய்மொழி தெரியவில்லை. தமிழ் மாத்திரம் பேசுகின்றனர். இளைய தலைமுறையினர் ஆண், பெண் எவரும் தங்கள் தாய்மொழியை அறியவில்லை. பலர் பள்ளிப்படிப்பை மேற்கொண்டுள்ளனர்; தமிழ் கற்கின்றனர், பேசுகின்றனர். ஆனால் கேரள மாநிலம் பாலக்காட்டு மாவட்டத்தில் உள்ள கிராமமான செம்மணாம்பதியில் வாழும் மூத்த தலைமுறையினரும், நடுத்தர வயதினரும் இரவல்ல மொழியைத் தாய்மொழியாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால், இளைய வயதினர் பலர் தம் மொழியை இழந்து விட்டனர். (இது தொடர்பான ஆய்வு விளக்கத்திற்கு, காண்க: Gnanasundaram 2012: Chapter 3.Endangerment of Eravalla & Gnanasundaram,2013).

1.ஏளு ஆண் மக்களுமு ஒரு பொட்ட பொண்ணுமு

ஏளு ஆண் மக்களுமு ஒரு பொட்ட பொண்ணுமு என்கிற எரவாள மொழி வாய்மொழிக் கதையை இனிக்காண்போம். இக்கதை பழனியம்மாள் என்னும் மூத்த வயதுப்பெண்மணி சொன்ன கதையாகும். இக்கட்டுரையாளர், தமிழகம், கேரளம் என்ற இரு மாநிலங்களிலும் இரவல்ல மொழிஆய்வு மேற்கொண்டார். அப்போது தாம் சந்தித்த எரவல்லப் பழங்குடியின மக்கள் பலரில், தமிழ்நாட்டில் உடுமலைப்பேட்டை அமராவதிப்பகுதியைச்சார்ந்த இந்திராகாந்தி விலங்குகள் சரணாலயப்பகுதியில் உள்ள பழனியம்மாள் என்பவரிடம் மாத்திரம்தான் அவர்தம் தாய் மொழியான எரவல்லத்தில் கதை சொல்லும் ஆற்றல் உள்ளதைக் கண்டுணர்ந்தார். கதை சொல்லும்போது அவர்க்கு உதவியாக அவர் தங்கையும் கதையில், உரையாடலில் பங்கேற்றார்.

இக்கதை பெரும்பாலும் இரவல்ல மொழி வகையிலேயே அமைந்துள்ளது. சில வேளைகளில், கதை சொல்லியான பழனியம்மாள், தமிழ் மொழிச்சொற்களை இரவல்ல மொழி வகையோடு கலந்தும் பயன்படுத்தி யிருக்கிறார் என்பதை இக்கதையைப் படிப்பவர்கள் உணரலாம்.

எரவல்ல மொழியில்உள்ள கதை- வாக்கியம் வாக்கியமாக அல்லது பகுதி பகுதியாக முதல் கட்டத்திலும், அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு இரண்டாம் கட்டத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. எரவல்ல மொழிவகையிலேயே இக்கதையைப்புரிந்து கொள்வதில் சிரமங்கள் உண்டு என்பதால் இக்கதையின் மொழிபெயர்ப்பு, பகுதி பகுதியாக இரண்டாவது கட்டத்தில் கொடுக்கப் பட்டுள்ளது. இரவல்ல மொழி வாக்கியங்கள், பேச்சுத்தமிழ் நடையோடு பெரிதும் ஒத்துப்போகின்றன. இலக்கியத்தமிழ் நடையில் அமைந்துள்ள இந்த மொழி பெயர்ப்பு, இரவல்ல மொழியின் மேற்குறித்த மொழியியல் தன்மையை- பேச்சுத் தமிழோடு நெருக்கமாய் உள்ள தன்மையை மனதில் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளது. இனி, கதையைக்காண்போம்.

ஏளு ஆண் மக்களுமு ஒரு பொட்ட பொண்ணுமு	ஏழு ஆண்மக்களும் ஒரு பெண் பிள்ளையும்
1. ஒரு கொங்கக்கி ஏளு ஆண் மக்கக	1.ஒரு கவுண்டருக்கு ஏழு ஆண் மக்கள்.
2. ஏளு ஆண்மக்ககு நடுவெ ஒரு பொட்ட பொண்ணுமு	2.ஏழு ஆண் பிள்ளைகளுக்கு இடையில் ஒரு பெண்பிள்ளையும் (உள்ளாள்).
3. அப்ப அந்த ஏளு பேருமு இருப்பட்ர3	3. அப்பொழுது அந்த ஏழு பேரும் இருக்கிறார்கள்.
4. அந்த ஏளு பேருமு ... இதுனு இங்கு லக்குண்டா... ...அய்ய ஏளு ஆண் மக்களுமு ... நாம இப்ப வனத்தகத்து நோக்கி கிடப்பம் என்று வய்யி. வனத்தகத்து நாம குடியிருந்திருப்பிட. நாம காடு வெட்டட தெங்க்கி? அய்ன ஏளு மலெக்கு பக்கமா போயி காடு : பெட்டடமு.	4. அந்த ஏழு பேரும் ...அந்த ஏழு ஆண் பிள்ளைகளும் .... இங்கு இருக்கிறார்கள். நாம் இப்பொழுது காட்டிற்குள் இருக்கிறோம் என்று வைத்துக் கொள் (ளுங்கள்)... காட்டிற்குள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் ..... (என்று வைத்துக் கொள்ளுங்கள்) நாம் காடு (வெட்டுகிறது)/ வெட்டுவது எவ்வாறு? அங்கே ஏழுமலையின் அருகில் சென்று காடு வெட்ட வேண்டும்.(இவை கதை சொல்லி கதை கேட்பவர்களைப் பார்த்துக் கூறியவை).
5. அய்னு ஏளு மலெக்கு அங்க பக்கமா போயி காடு வெட்டி (கொண்டு) இருப்பட்ரு3	5. அங்கே ஏழுமலைக்குப் பின்புறம் சென்று நிலம் வெட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.
6. அப்ப ஏளு ஆண்களுமேரும் காடு வெட்டி ஈடு பூட்டி ஏர் ஓட்டிக் கொண்டிருப்பட்ரு3	6. அப்பொழுது ஏழு சகோதரர்களும் நிலம் வெட்டி, மாடு பூட்டி, ஏர், ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
7. இங்கெ அம்மெயுமு அப்பனுமு சோளக்களியோ கோரங்களியோ மருக்கு பெங்க பாக்கு	7.இங்கே தாயும் தந்தையும் சோளக்களியோ கொள்ளுக் களியோ... செய்து... பெண்ணிடம்........
8. அய்ய ஏளு பேருந்துங்க்கு ஏளு சட்டி ... மண்ணு சட்டி ... மண்சட்டி ... அய்ய மண்ணு சட்டிலி ஏளு பேருத்துங்க்கு ஏளு உருண்டை களி ... கொள்ளு இடிச்சி... அய்ய கொள்ளு கொளக்கட்டெ ஏளு உருண்டெ கொளுக்கட்டெ... களி ஏளுருண்டெ ... சட்டி மெலெ ஏளு சட்டினெ மேல வெச்சி .. அய்ய பெங்ககாரி பாக்கு கொடுத்து போடு	8. அந்த ஏழு பேர்க்கும் ஏழுசட்டி, மண்சட்டி..... அந்த மண்சட்டியில் ஏழுபேருக்கும் ஏழு உருண்டைக் களி.... கொள் இடித்து... அந்தக் கொள் கொழுக்கட்டை ஏழு உருண்டை கொழுக்கட்டை.... களி ஏழுருண்டை..... சட்டி மேல் ஏழு சட்டியை மேலே வைத்து... அந்தப் பெண்ணிடம் கொடுத்தார்கள்.

9. ஆருக்கு	9. யாருக்கு ?
10. ஆங்களெ மேருக்கு	10. அண்ணன் தம்பிமார்க்கு
11. ஏளு பேர்த்துங்க்குக்கு	11. ஏழு பேருக்கும்
12. ஏளு மலெக்கு அங்க பக்கமா காடுவெட்டட ஆங்களமேருக்கு பெங்கக்காரி களி கொண்டு போடு	12. ஏழு மலைக்கு அந்தப்பக்கம் காடு (வெட்டுகிற) வெட்டும் அண்ணன் தம்பிமார்க்குச் சகோதரி களி கொண்டு போகிறாள்.
13. அங்கு ஏளு மலெ கடந்து ஏளாவது மலெலி ... பொண்ணு கள்ள ரவளனு ... (ஆர்னு வச்சிருப்புடு?) ஒரு கடமெனு வச்சிருப்புடு	13. அங்கே ஏழுமலை கடந்து ஏழாவது மலையில் இந்தப் பெண்கள்ளப் புருஷனை (...யாரை வைத்திருக்கிறாள்?....) ஒரு கடமானை வைத்திருக்கிறாள்.
14. கடமான் இருப்புடல்லா அய்ய கடமானெ ... கள்ள ரவளனு வச்சி கொண்டது	14. கடமான் இருக்கிறதல்லவா ...அந்தக் கடமானை ...கள்ளப் புருஷனாக வைத்துக்கொண்டாள்.
15. ஆரு?	15. யார்?
16. பெங்ககாரிவச்சி கொண்டுது	16. அந்தப் பெண் வைத்துக் கொண்டாள்.
17. அப்ப ... அங்கு போயி ... ஆரு மலெ கடந்து ... ஆராவது மலெயகத்து போயி ... ஈ பெங்ககாரி ... வந்து ... அய்ய ... கள்ள ரவளெனெ விளிப்புடு	17.அப்பொழுது அங்குப் போய்... ஆறுமலை கடந்து.. ஆறாவது மலையின் பக்கம் இந்தப் பெண் சென்று... இந்தப் பெண்... வந்து... அந்தக் கள்ளப் புருஷனை விளிக்கிறாள்.
18. கடமானெ கடமானெ, காடேரி வா கடமானெ; எருக்கல...செடினுகண்டு எதுத்துவா கடமெ அய்னென்று விளிப்புடு	18. "கடமானே, கடமானே , காடு ஏறி வா கடமானே, எருக்கஞ்செடியைக் கண்டு எதிரே வா கடமெ" என்று விளிக்கிறாள்.
19. அய்ய கள்ள ரவள்னெ விளிச்சா ...	19. அந்தக் கள்ளப் புருஷனை விளித்தால் ...
20. ஈ கடமெ வந்து சிரிச்சி களிச்சி ... ஆ பொண்ணு கூட சிரிச்சி களிச்சி ...	20. இந்த கடமான் வந்து சிரித்து / மகிழ்ந்து .... அந்தப் பெண்ணுடன் சிரித்து மகிழ்ந்து ...
21. என்ன பண்ணுடு	21. என்ன செய்கிறாள் ?
22. சின்னாங்களென்ட களினுமு அய்யெ கொள்ளு புட்டுனுமு அய்யெ கடமெய்க்கு கொடுத்து காஞ்சி திம்ப	22. தம்பியுடைய களியையும் அந்தக் கொள்ளுப் புட்டையும் (அந்தக்) கடமானுக்குக் கொடுத்து விட்டாள் (கொடுத்தாள்) உண்பதற்காக.
23. அப்ப ஏளு பேர்த்துண்ட களிலி ஒரு ஆளுண்ட களி கொரஞ்சி போடல்லா?	23. அப்படியானால், ஏழு பேருடைய களியில் ஒருவருடைய களி குறைந்து போகிறதல்லவா ?
24. பங்கு கொரஞ்சி போடு	24. பங்கு குறைந்து போகிறது.

25. அப்ப ஆரு ஆண்களுமேர்ண்ட களிதான் இருப்புடு ஆரு சட்டிலி	25. அப்படி என்றால் ஆறு சட்டிகளில் ஆறு சகோதரர்களுடைய களிதான் இருக்கிறது.
26.அப்ப கொண்டுபோயி கொடுப்பற போது ஏளு ஆண்களு மேரு ...வந்து ...(கதை கூறலின் போது பயன்படுத்தப்படும் தமிழ்ச் சொல் இது) திம்படமென்று வந்து கேய்ந்தரு	26. அப்பொழுது கொண்டு போய்க் கொடுக்கும் போது(கொடுக்கிறபோது) .... ஏழு சகோதரர்களும், ...வந்து... ...(கதை கூறலின்போது பயன்படுத்தப் படும் தமிழ்ச்சொல் இது) களி உண்ணலாம் என்று (வந்து சேர்ந்தார்கள்) வந்தார்கள்.
27. அப்ப சின்னாங்களெ கேட்டது	27. அப்பொழுது தம்பி கேட்டான்.
28. அல்லம்மணி ஆரு ஆண்கள மேருக்குதேன் சோரு ... களி இருப்புடு எனக்கு ....எங்கி ... யின்று கேப்பட போது	28. "இல்லை (அல்ல) அம்மணி ஆறு பேருக்குத்தான் (சகோதரர்களுக்குத் தான்) சோறு ...களி இருக்கிறது. எனக்கு எங்கே என்று கேட்கும் (கேட்கிற) போது ...."
29. அண்ணா இன்று விருந்திங்காரு நெறய வந்து கேஞ்சரு அதினாலெ நினக்கு களி இல்லென்று சொல்லி கேய்ந்து... ஆயினென்று சொல்லி கேய்ந்து	29. "அண்ணா, இன்று விருந்தினர்கள் நிறையப் பேர் வந்து விட்டார்கள். அதனால் உனக்குக் களி இல்லை என்று சொன்னாள்(சொல்லி விட்டாள்)"... அவ்வாறு சொன்னாள்.
30. அப்ப சரின்று அய்ய ஆங்கள மேர்க்கு, ஆளுக்கு இத்தர வண்ணம் இத்தர வண்ணம் கொடுத்து கேய்ந்துஞ் அய்யூராங்களெக்கு	30."அப்படியானால் சரி" என்று சொல்லி அந்த அண்ணன்தம்பிமார்க்கு ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தாள்... அந்த அண்ணன் தம்பிமார்க்கு
31. கொடுத்து கேஞ்சா ...	31.கொடுத்துச் சென்றால் / கொடுத்தால்
32. சரி இன்று தான் விருந்து கார் வந்து கேஞ்சரு நாளெக்கினாலும் நமக்கு களி வருமென்று நோக்கினா	32. சரி இன்றைக்குத்தான் விருந்தினர் வந்து விட்டனர்/ வந்தனர். நாளைக்காவது நமக்குக் களி வருமா என்று பார்த்தால்...
33. ம்...மற்றநா அதுக்கும் மற்ற நா அயிலுனுதா களி கொண்டு போடு தாமா	33.ம் ... அடுத்தநாள் அதற்கும் அடுத்த நாள் அவனுக்குத்தான் (கடமானுக்குத் தான்) களி கொண்டு போகிறாளாமாம்.
34. அய்ய ஆரு சட்டிதான் களி கொண்டு போடாமாம்	34. அந்த ஆறு சட்டிக் களிதான் கொண்டு போகிறானாமாம்.
35. அய்ய ஆரு சட்டி களினெ அய்ய கடெமெக்கு கொண்டு போயி கொடுத்து கேய்ந்து	35. அந்த ஆறு சட்டிக் களியை அந்தக் கடமெக்குக் கொண்டு போய்க் கொடுத்தாள்.
36. மருக்கன்றும் கேட்டது	36. மறு நாளும் கேட்டார்.
37. ஏன் அம்மணி நிந்தலெதான் விருந்துக்கார் வந்திருப்புட்ருன்று சொன்னிகெ இன்றும் ஆரு ஆங்களெ	37. "ஏன் அம்மணி" "நேற்றுத்தான் விருந்தினர் வந்திருக்கிறார்கள் என்று சொன்னாய். இன்றைக்கும் ஆறு

மேருக்கு தான் களி வந்திருப்புடு எனக்கெங்க்கி என்று கேக்கங்காட்டி....	பேருக்குத்தான் களி (வந்திருக்கிறது) இருக்கிறது. எனக்கு எங்கே" என்று கேட்டவுடன்...
38. அண்ணா இன்றும் தேன் விருந்துக்கார் வந்து கேந்தரு இன்றும் நினக்கு களி இல்லண்ணா ... ஆயினு செல்லி கேய்ந்து	38. "அண்ணா இன்றைக்கும் தான் விருந்தினர் வந்து விட்டனர். இன்றைக்கும் உனக்குக் களி இல்லை அண்ணா...." என்று (சொல்லி விட்டாள்) சொன்னாள்.
39. இதுனு நாம நோக்கணும்	39. 'இதனை நாம் கவனிக்க வேண்டும்'
40. நம்ம பெங்க எந்துகொளி செவுடு ஆயினுன்று செலுங்கியது... இதுனு நாம நோக்குகா ஆயனின்று செலுங்கியது	40. 'நம்முடைய பெண் (தங்கை) எதற்காக அந்த மாதிரி சொல்கிறாள். இதனை நாம் கவனிக்க வேண்டும்' என்று எண்ணியது.
41. அண்ணா நீங்க ஏரோட்டி	41. "அண்ணா நீங்கள் உழுங்கள்".
42. நான் வந்து இன்று கூரெக்கி பெக்காஞ்சி வரட... கூரக்கி பெக்காஞ்சி	42. "நான் வந்து இன்றுவீட்டுக்குப்போய் வருகிறேன். வீட்டுக்குப் போய் வருகிறேன்".
43. எனக்கு தல வலிப்புடு.... வருத்தமாடு நான் இன்று கூறக்கு போட என்று செலுங்கியது	43. "எனக்குத் தலை வலிக்கிறது. நோகிறது. நான் இன்று வீட்டுக்குப் போகிறேன் என்று சொன்னாள்".
44. சின்னாங்களெ வந்து பாதிலெ வந்து ஒளிஞ்சு இருந்து கொண்டது	44. தம்பி, இடையில் வந்து ஒளிந்து இருந்து கொண்டான்.
45. ஒளிஞ்சிருப்படபோது இத்தங்கக் காரி என்ன பண்ணுடு	45. ஒளிந்து இருக்கும் போது இந்தத் தங்கை என்ன செய்கிறாள் ?
46. சட்டிமேலெ சட்டி ... ஏளு சட்டிவெச்சி ஏளு பேர்த்துங்க்கு களி கொண்டு வருடு	46. சட்டி மேல் சட்டி வைத்து, மொத்தம் ஏழு சட்டிகளில் ஏழு பேர்க்கும் களி கொண்டு வருகிறாள்.
47. களி கொண்டு வந்து ... அய்ய ஆரு மலெ கடந்து ஆராவது மலெயகத்து வந்து நோக்கிருந்துண்டு விளிப்புடு	47. களி கொண்டு வந்து .... அந்த ஆறு மலை கடந்து ஆறாவது மலையின் பக்கம் வந்தமர்ந்து கொண்டு கூப்பிடுகிறாள்.
48. ஒரு தண்ணி ஊத்துவாக்கு வந்து நோக்கியிருந்துண்டு விளிப்புடு	48. ஒரு நீர்ஊற்றின் பக்கமாக வந்தமர்ந்து கொண்டு விளிக்கிறாள்.
49. கடமானெ கடமானெ காடேரி வா, எருக்கலஞ்செடினு நோக்கி எதுத்துவா கடமெ என்று விளிக்குங்காட்டி	49. "கடமானே, கடமானே காடு ஏறிவா கடமானே, எருக்கஞ்செடியை நோக்கி எதிரே வா கடமெ" என்று அழைக்கும் போது...
50. அய்யோ கடமெ எங்கோ கெடந்தது ஓடி வருடு	50. ஐயோ! கடமெ, எங்கேயோ இருந்தது, ஓடி வருகிறது

51. ஓடிவந்து அனிச்சிகூட கொஞ்சி கொலபட்டு சிரிச்சி களிச்சி களிச்சிண்டு .... அப்புறொம் ...	51. ஓடிவந்து பெண்ணுடன் கொஞ்சி வெறியோடு சிரித்து, களித்து, களித்துக்கொண்டே ... பிறகு
52. சின்னாங்களெண்டெ களினுமு அய்ய கொள்ளு புட்டுமு கொடுத்து கயிந்து	52. தம்பியின் களியினையும் அந்தக் கொள்ளுப்புட்டையும் கொடுத்துச் சென்றாள்.
53. ஓஹோ நீயி	53. 'ஓஹோ நீ(அப்படிப்பட்டவளா)'
54. அப்புற மக்யா நேத்துமு ரெண்டு நாளும் பு3ட்டுகயிந்து	54. பிறகு மறுநாளும்... இரண்டு நாட்களும் கழிந்தன.
55. ரெண்டாவது நாளு ... வந்து ... ஆங்கள நோக்குடு	55. இரண்டாவது நாள் .... வந்து .... சகோதரன் யோசிக்கிறான்.
56. ஈ பொண்ணு இனியே ....நமுக்கு களியில்லாதெ பண்ணுட இது என்னன்று நாம நோக்குக இது எப்படி நடந்திண்டுருப்புடுன்று இதுனு நாம நோக்கனும் ஆயினின்று செலுஞ்சியது	56. 'இந்தப்பெண் இவ்விதமாக நமக்குக் களியில்லாமல் செய்கிறாள். இது என்னவென்று நாம் கவனிக்க வேண்டும் இது எப்படி நடந்து கொண்டு உள்ளது என்று இதனை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்று எண்ணியது.
57. சின்னாங்களெ வந்து ஒரு செடி மரத்திலி வந்து ஒளிஞ்சி நோக்கிருப்புடு கண்டுபிடிப்ப	57.தம்பி ..வந்து ..ஒரு மரத்தில் ஏறி ... வந்து... ஒளிந்து பார்த்துக் கொண்டிருக்கிறான் (நடப்பது என்ன வென்று) கண்டுபிடிப்பதற்காக.
58. அப்புரொம்... கடமானெ விளிச்சு களி கொடுத்திண்டுருப்புடு சின்னாங்களெ பங்கு களினெ கொடுத்திண்டிருப்புடு	58. அப்புறம் ..... கடமானை விளித்து அவள் களி கொடுத்துக் கொண்டிருக்கிறாள். தம்பியின் பங்குக் களியினை கொடுத்துக் கொண்டிருக்கிறாள்
59. கொடுத்து தின்று களிச்சி ... எது ... இவரு தின்று களி தின்று களிச்சி சிரிச்சி மொத்தம் தப்படதுக்குள்ளெ	59. இவள் கொடுக்கக் கடமெ உண்டு, களித்து, எது? களி தின்று, களித்து, சிரித்து.... இவை முழுவதும் முடிவதற்குள்
60.ஆங்களெ தமன்பாக்கு பக்காந்து நோக்கி கொண்டு ... எங்க்கி ஏர் ஓட்டடங்க	60.அண்ணன்-தம்பிமார் அனைவரும் போய் ஏரோட்டி உழுது கொண்டுள்ளார்கள்.
61. அப்புறொம் அண்ணன் கேட்டது	61. அப்புறம் அண்ணன் கேட்டார்.
62. ஏண்டா நீ வூட்டுக்கு பக்காஞ்சி ன்று சொன்னெ பக்காஞ்சி வந்து கேய்ந்தியா / கேஞ்சியா ....கேட்டுது	62."நீ, வீட்டுக்குப் போய் வருகிறேன் என்று சொன்னாய்; போய் வந்தாயா" என்று அண்ணன் கேட்டார்.
63. இல்லண்ணா நான் அங்கு போயி குளுப்படல்லி கெடந்து கேஞ்சது நல்லாய்க் கொண்டு வந்தே ஆயின்னு செட்டு	63."இல்லையண்ணா, நான் அங்கே சென்று வீட்டில் (குளுப்படலில்) கிடந்து தூங்கினேன். சுகமாகிக் கொண்டு வந்தேன்" (அப்படி) என்று சொன்னது.
64. அப்புரொம் வெகுநேரம் கிருமிச்சி பெங்கக்காரி களி கொண்டு போட்டு	64.அப்புறம் வெகுநேரம் கழித்து சகோதரி களி கொண்டு போனாள்.

65.வருனண்ணா ஒக்க களி திண்ணுண்டு போகாம் ..வெரி ஆயினின்று செலி விளிப்படபோது சின்னாங்களெயும் போடு	65. "எல்லாரும் வாருங்கள் அண்ணா, களி சாப்பிட்டுப் போகலாம், வாருங்கள்" என்று சொல்லி அழைத்த போது, தம்பியும் சென்றான்.
66. போயி ஏய் அம்மணி இன்று எனக்கு களி இருப்படா இல்லியா	66. சென்று "ஏய் அம்மணி, இன்றைக்கு எனக்குக் களி இருக்கிறதா இல்லையா?"...
67. இல்லண்ணா இன்றுமு விருந்து காரிகெ வந்து கேய்ந்தரு இன்றும் நினக்கு களி இல்லெ ஆயினென்று செல்ல ...	67. "இல்லை அண்ணா (கதை சொல்லி தவறுதலாக இங்கு அண்ணா என்று கூறிவிட்டார்; தம்பி என்றோ எரவல்ல மொழியில் சின்னாங்களெ என்றோ கூறியிருக்க வேண்டும்) இன்றைக்கும் விருந்தினர் வந்து விட்டனர். இன்றைக்கும் உனக்குக் களி இல்லை" என்று சொல்ல....
68.ஓஹோ நீ அப்படி சம்போகமா ஆயினின்று செலுங்கியது	68. "ஓஹோ.... சேதி அப்படியா என்று சொல்ல...
69.சரி சரி போ ன்று செல்லி பெங்கண்ணெ செல்லிபிட்டு கேய்ந்து	69. "சரி சரி போ" என்று சொல்லி.... அண்ணன் (கதை சொல்லி தவறுதலாக இங்கு அண்ணண் என்று கூறிவிட்டார்; தம்பி என்றோ எரவல்ல மொழியில் சின்னாங்களெ என்றோ கூறியிருக்க வேண்டும்) சொல்லி விட்டுச் சென்றார்.
70.அப்புறொம் மக்யா நேத்து எந்துக்குளி சேஞ்சிருப்புடு	70.அப்புறம் மறுநாள் என்ன (செய்திருக்கிறார்) செய்திருப்பார்?
71. ஈ பொண்ணு பு3ளிச்ச கணக்கியே போயி ஆ கடமானெ பு3ளிச்சி/ விளிச்சிருப்புடு	71.இந்தப் பெண் அழைத்தது போலவே சென்று அந்தக் கடமானை விளித்தான்.
72. சின்னாங்களெ போயி பு3ளிப்பிடு	72. தம்பி போய்க் கூப்பிடுகிறான்.
73. கடமானெ கடமானெ காடேரி வா கடமெ எருக்கலஞ் செடினு நோக்கி எதுத்து வா கடமெ அய்னு செலி பு3ளிக்குங்காட்டி ...	73."கடமானே, கடமானே காடு ஏறிவா கடமானே, எருக்கஞ் செடியினை நோக்கி ஏதிரே வா கடமெ" என்று சொல்லி அழைத்தவுடன்
74.அய்ய கடமெ இப்போதெ பு3ளிப்புடுன்று செலி ஓட்டமா ஓடி வந்து கேய்ந்து	74. அந்தக்கடமான், "இப்பொழுதே அழைக்கிறாளே (என்னை)" என்று சொல்லி ஓட்டமாக ஓடிவந்து சேர்ந்தது/ஓடி வந்துவிட்டது.
75. ஓடி வந்ததும் என்ன பண்ணினது	75. ஓடிவந்ததும், என்ன செய்தார்கள்?
76. ஆங்களெமேரு ஒக்க கடமனெ வெட்டி ஒடிச்சி கறி அறுத்து பூரா கறியிட்டு கேந்தரு	76.அண்ணன்-தம்பிமார் எல்லோரும் கடமானை வெட்டி, முறித்து, அறுத்து முழுவதும் கறியாக்கி விட்டனர் / கறியாக்கினர்.

77.பெங்ககாரி களி கொண்டு வந்தாற்று	77.சகோதரி, களி கொண்டு வந்தாயிற்று.
78.அண்ணா களிதிம்பம் வருனுண்ணா என்று செல்லி விளிக்குங்காட்டி ...	78. "அண்ணா களி உண்போம் வாருங்கள் அண்ணா" என்று சொல்லி அழைத்தவுடன் ....
79.நாமின்று எல்லாருமே கூரக்கி போகா .... ஆயினின்று செல்லி ... ஆயினின்று செல்லி ... அய்ய கறினுமு எடுத்திண்டு... அய்ய பொண்ணு கொண்டு வந்த களினும் எடுத்துண்டு பூரா மலனுவிட்டு கீ எறங்கி ஒக்க கூரக்கு வந்தாற்று	79. "நாம் எல்லோரும் இன்றைக்கு வீட்டிற்குப் போவோம்" என்று சொல்லி.... என்று சொல்லி அந்தக் கறியையும் எடுத்துக் கொண்டு .... அந்தப்பெண் கொண்டு வந்த களியையும் எடுத்துக்கொண்டு மலைப் பகுதி முழுவதையும் விட்டுக் கீழே இறங்கி ஒரு வீட்டுக்கு வந்தாயிற்று.
80.வந்து ... அய்ய பொண்ணும் விசனப்பட்டுகவலப்பட்டுண்டிருப்புடு	80.வந்து....அந்தப்பெண் விசனப்பட்டுக் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறாள்.
81.நம்மெ ரவளனெ கொன்று காஞ்சிரெ ஈ சின்னாங்களண்ணெ உயிரோடெ விட்டு போடா ஆயினின்று சினுங்கியது	81.'நம் கணவனைக் கொன்று விட்டார்களே. இந்தத் தம்பியை உயிரோடு விட்டு விடக்கூடாது' என்று (தனக்குள்) சொல்லிக்கொண்டாள்.
82. என்ன பண்ணி கேய்ந்தாமா	82. என்ன செய்துவிட்டாளாம்?
83.இங்கேயே சோறு ஆக்கிக் கொண்டிருப்புடுவே	83.இங்கே சோறு சமைத்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா?
84.ஈ பொண்ணு போயி என்ன பண்ணிந்து	84.இந்தப்பெண், போய் என்ன செய்தாள்?
85.நெல்லு போரிலி பில்லு இருப்ப டல்லா ... அய்ய பில்லுனரி... ஒரு ரெண்டு படி நெல்லும் எடுத்துண்டு வந்து அதுனு குத்தி பெடச்சி அய்ய அரி ஒரு படி எடுத்திண்டு	85.நெற்போரில் நெற்கதிர் இருக்கிற தல்லவா? அந்த நெற்கதிர்... ஒரு இரண்டுபடி நெல் எடுத்துக்கொண்டு வந்து அதனைக் குத்திப் புடைத்து... அதனை ஒரு படி அரிசியாக்கி எடுத்துக் கொண்டு...
86.பாம்பு இருப்பிடல்ல .... சாரண பாம்பு ... அய்ய ஆ பாம்புனெ அடிச்சி உரிச்சி ஆரெ மீனு சாரு ... மீனென்று செலுங்கியது	86.பாம்பு இருக்கிறதல்லவா? சாரைப் பாம்பு அந்தப் பாம்பை அடித்து, உரித்து .... ஆரைமீன்குழம்பு (வைப்பதற்கான) மீன் என்று சொன்னது.
87. அம்ம வாக்கு கொடுத்திண்டது	87. அம்மா நம்பியது.
88. அம்மா நம்ம சின்னாங்களக்கி ... வந்து ஆரெ மீனு சாருந்தான் நல்லா புடிக்கும்	88. அம்மா நம்ம தம்பிக்கு வந்து ஆரெ மீனு கொழம்பு தான் மிகவும் பிடிக்கும்.
89. நீயி இதுனு சின்னாங்களெக்கு தனி சாரு வச்சுபோடு ஆயின்று செல்லி அம்மா கய்யாறினும் இட்டு ஈ பச்சரி சோற்றுங்க்கு ஆரெ மீனு சாரு நல்லாருக்கும் ஆயின்று செல்லி அம்மா பாக்கு கொடுத்தி கெய்ந்து	89. நீ இதனைத் தம்பிக்காகத் தனியாகக் குழம்பு வைத்துவிடு என்று சொல்லி அம்மா கையிலிட்டு, "இந்தப் பச்சரிசிச் சோற்றுக்கு ஆரை மீன்குழம்பு நன்றாக இருக்கும்" என்று சொல்லி அம்மா விடம் கொடுத்துச்சென்றது.

90. அம்மா என்ன பன்னிருப்புடு	90.அம்மா என்ன செய்திருப்பார்/ செய்தார்?
91. ஈ கடமெ கறி சாரொக்க இவுருக்கு... ஈ பாம்பு கறினுமு அய்ய பச்ச நெல்லு சோறுமு சின்னாங் களெக்கி	91.இந்தக் கடமெ கறிக்குழம்பு முழுவதும் இவர்களுக்கு (மற்றவர்களுக்கு)... இந்தப் பாம்புக் கறியும் அந்தப் பச்சரிசிச் சோறும் தம்பிக்கு..."
92. சின்ன புள்ளெ நீ வந்து ஈ அரிசி சோறுமு ஈ ஆரெ மீனு சாருமு நீ தின்றுக்க ஆயின்று செல்லி கொடுத்து கெய்ந்து ...	92."சின்ன பிள்ளை நீ வந்து இந்த அரிசிச்சோறும் இந்த ஆரை மீன் குழம்பும் சாப்பிடு (சாப்பிட்டுக் கொள்) என்று சொல்லிக் கொடுத்தது.
93. ஆருக்கு	93. யார்க்கு?
94.சின்னாங்களெக்கு கொடுத்து கெய்ந்து	94. தம்பிக்குக்கொடுத்தது.
95.கொடுத்ததுமு ஈ புள்ளெ தின்றதுமு அய்னிய ஒரு மயக்கங்கணக்கி கெடந்தவாக்குலெ சத்து போட்டு	95.கொடுத்ததும், இந்தப்பிள்ளை உண்டதும் அங்கேயே ஒரு மயக்கம் போல வந்து கிடந்த வண்ணமே இறந்து போனான்.
96.சத்து போனதுமு (ம்) கொண்டு போயி சுடுகாட்டுலெ பொதச்சி கெய்ந்தரு.	96.இறந்து போனவுடன் கொண்டு போய், சுடுகாட்டில் புதைத்து விட்டனர்.
97.பொதச்சி(கே)ஞ்சேது இவுரு ஆங்களெ பெங்கமே ரொக்க நல்லாடு ருப்புடு	97. புதைத்த பிறகு இவர்கள்- ஆண்கள் பெண்கள் எல்லாரும் நன்றாக இருக்கிறார்கள் / வாழ்கிறார்கள்.
98. அப்புறொம் ஒரு வாரம் கிருமிச்சி	98. அப்புறம் ஒரு வாரம் கழிந்தது.
99. இந்த பெங்ககாரிக்கி மாப்ளெ காருக வந்து பொண்ணு கேப்பட்ரு	99.இந்தப் பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் வந்து பெண் கேட்கிறார்கள்.
100.பொண்ணு கேட்டு ... அல்லா சீமெல்லாம் முடிஞ்சி கலியாண முகூர்த்தமெல்லாம் ஆய்க்கொண்டது	100.எல்லா இடங்களிலும்- எல்லாச் சீமைகளிளெல்லாம் பெண் கேட்டு முடிந்து, கலியாண மூகூர்த்த மெல்லாம் நிச்சயமானது.
101.இனி பூவுமாலெ வேணுமே புதுப் பொண்ணுக்கு	101. இனி, பூவும் மாலையும் வேண்டுமே புதுப் பெண்ணுக்கு.
102. அப்புறொம் ஆண்களமேருமு ஊர் ஊரா நடந்தாலுமு ஈ பொண்ணுங்க்கு பூவெ கெடப்பலெ மாலெயும் கெடப்பி லெயாமாம்	102. பிறகு...சகோதரர்கள் எல்லாம் ஊர் ஊராகச் சென்றாலும் இந்தப் பெண்ணுக்குப் பூ எதுவுமே கிடைக்க வில்லை; மாலையும் கிடைக்க வில்லையாம்
103.அப்புறொம் ஊர் மூலெல்லாம் போய்கேட்டுகேஞ்சு	103. அப்புறம் ஊர் முழுவதும் போய் (மூலைக்கு மூலை போய்) கேட்டார்கள்.

104. சுடு காட்டு நேரு வந்த போது சின்னாங்களண்ணு பொதச்ச சுடு காட்டில நோக்கினா... அய்னெ நந்தாவனம் கணக்கி னெ நிப்புடாமாம் பூவு	104. சுடுகாட்டுக்கு நேரே வந்தபோது தம்பியைப் புதைத்த (சுடுகாட்டில்) சுடுகாட்டைப் பார்த்தால், அங்கே நந்தவனம் போலப் பூத்திருக்கின்றன வாம், பூக்கள்!
105.அட நாம இத்தன பக்கமு நோக்கி நம்ம மகக்கு பூவும் கெடச்சிலியே	105.“அட, நாம் இத்தனை இடங்களில் தேடியும் நம் பெண்ணுக்குப் பூ கிடைக்க வில்லையே”.
106.இங்க்கி நோக்கு நந்தாவனம் கணக்கெ இருப்புடு ஆயினெ செலிஞ் சேது/செலிகேஞ்சு.... நம்ம வந்து பூவுங்க்கி பிடுங்கி கொண்டு போகாம் ஆயினென்றுசெலிஞ்சேது/செலி கேஞ்சு	106. “இங்கே பார். நந்தவனம் போல இருக்கிறது” என்று சொன்னார்கள். நாம் வந்து பூக்கள் பறித்துக் கொண்டு போகலாம்?” என்று சொன்னார்கள்.
107.வந்தொரு பூவினெ புடுச்சி...ம்... ம்... அப்பம் கேட்டது ...	107. வந்து ஒரு பூவினைப்/பூவைப் பிடித்து.....ம்....ம் அப்பொழுது கேட்டார்கள்.
108. அப்பந்தானெ கேக்கணும் ...	108.அப்பொழுது தானே கேட்க வேண்டும்.
109. சின்னாங்களெ, வெளியாங்களெ சின்னபெங்களுக்கு கலியாணொம், நீ பூவும் தரனும், பூவளகு நோக்கனும், மாலெ தரனு(ம்), மாலளகு நோக்கனு (ம்)....அய்னென்று சினுங்கியது	109.“தம்பீ, அண்ணா, சின்னப் பெண்ணுக்குக் கலியாணம், நீ பூவும் தரவேண்டும், பூவழகு பார்க்க வேண்டும் (பூவணிந்த பெண்ணின் அழகு பார்க்க வேண்டும்), மாலை தரவேண்டும், மாலை அழகு பார்க்க வேண்டும் (மாலையணிந்த பெண்ணின் அழகு பார்க்க வேண்டும்)” என்று சொன்னார்கள்.
110. மகெனத்து கேட்டது. சப்த கோபயா திருந்தேயங்கடா	110. மகனிடம் கேட்டார். “மிகவும் கோபமாக இருக்கின்றாயா?
111. சின்னாங்களெயெந்து சொல்லுடு	111. தம்பி என்ன சொல்கிறான்?
112. சின்னாங்களெ வெளியாங்களெ சின்னலயக்காரிகி கலியாணம் சாரண பாம்படிச்சி சமச்சுவெச்ச பெங்ககாரிக்கி நா பூவும் தரியில, பூவளகு நோக்கியில, மால தரியில, மாலளகு நோக்கியில ஆய்னுன்று செல்லி கெய்ந்தது.	112.“தம்பிமாரே, அண்ணன்மாரே, சின்னப்பெண்ணுக்குக் கலியாணம், சாரைப் பாம்படித்துச் சமைத்து வைத்த என் சின்னப் பெண்ணுக்கு நான் பூவும் தரமாட்டேன் (தரவில்லை), பூவழகு பார்க்க மாட்டேன் (பார்க்க வில்லை), மாலை தரமாட்டேன் (தரவில்லை), மாலையழகு பார்க்க மாட்டேன் (பார்க்கவில்லை)” (அப்படி) என்று சொல்லிச் சென்று விட்டது.
113.அப்புறம் சரி என்று செல்லி, வெள்ளாங்களக்காரன் வந்து அய்ய பூவுனு கேட்டது.	113.அப்புறம் ‘சரி’யென்று சொல்லி அண்ணன்காரன் வந்து, அந்தப் பூவைக் கேட்டான்.

114. பூவுனுபிடிச்சிண்டு சின்னாங்களெ வெளியாங்களெ சின்னபெங்கெக்கு கலியாணம் நீ பூவும் தரணு, பூவளகு நோக்கணு, மாலெ தரணு, மாலளகு நோக்கனு ஆயினென்று கேட்டதாமாஞ்	114. பூவினைப் பிடித்துக் கொண்டு, "தம்பீ, அண்ணா, சின்னப் பெண்ணுக்குக் கலியாணம், நீ பூவும் தரவேண்டும், பூவழகு பார்க்க வேண்டும், மாலை தரவேண்டும், மாலையழகு பார்க்க வேண்டும்" என்று கேட்டதாமாம்.
115. அப்ப ஈ ஆங்களகார சொல்லிட்டு தா	115.அப்பொழுது இந்தச் சகோதரன் (சொல்லி விட்டதாம்) சொன்னதாம்.
116. சின்னாங்களெ வெளியாங்களெ சின்னபெங்கக்கு கலியாணம், சாரண பாம்படிச்சி சமச்சு வச்ச என் சின்ன பெங்கக்கு நான் பூவும் தரியிலெ, பூவளகு நோக்கியில்லெ, மால தரியில்லெ, மாலளகு நோக்கியிலெ ஆயினென்று செலுங்கியது; செல்லி கேய்ந்து.	116."தம்பீ, அண்ணா, சின்னப் பெண்ணுக்குக் கலியாணம், சாரைப் பாம் படித்துச் சமைத்து வைத்த என் சின்னப் பெண்ணுக்கு நான் பூவும் தரமாட்டேன் (தரவில்லை), பூவழகு பார்க்கமாட்டேன் (பார்க்கவில்லை), மாலை தரமாட்டேன் (தரவில்லை), மாலையழகு பார்க்க மாட்டேன் (பார்க்கவில்லை)" என்று சொன்னான்/சொல்லிவிட்டான்.
117. சென்னதமுஞ் அப்புறம்... சரின்று செலுங்கியது கெஞ்சி கெஞ்சி கேட்டு	117.சொன்னதும்...அப்புறம்...சரிஎன்று சொன்னது; கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டது'
118.அய்ய சத்து கொவயத்து கெடப்படா ஆங்களெ என்ன/எந்து சொல்லுடு	118.இறந்து பூமிக்குள்கிடக்கின்ற அந்தச் சகோதரன் என்ன சொல்கிறான்?
119. நான் அய்னு பூவு மாலெ தந்தாலுமு ஈகெ தாரா முகூர்த்த முடிவிடது மும்பு பெங்களுனுமு அனியினுமு நீ இங்கெயே நான் இருப்படங்க்கு கூட்டி கொண்டு வரனு... ஈ நந்தா வனத்துக்கு கூட்டி கொண்டு வரனும் ஆயினென்று சென்னது	119."நான் அப்படியே அவளுக்குப் பூ, மாலை தந்தாலும் இங்கே மூகூர்த்தம் முடிவதற்குள் பெண்ணையும்... (மாப்பிள்ளையையும்) இங்கேயே, நான் இருக்குமிடத்திற்கு நீ அழைத்துக் கொண்டு வரவேண்டும். இந்த நந்தவனத்துக்கு அழைத்துக் கொண்டு/ வரவேண்டும்" என்று சொன்னது.
120.சரி தம்பி நான் அய்னியே கூட்டி கொண்டு வருட அய்னென்று சென்னதுமு... அய்ய பூவுனொக்க புடுங்கிகொண்டு போட்று / பா³ட்று	120."சரி, தம்பி நான் அங்கேயே கூட்டிக் கொண்டு/வருகிறேன்" என்று சொல்லி விட்டு உடனே.... வந்து.... பூக்களெல்லாம் பறித்துக் கொண்டு போகிறார்கள்.
121. புடுங்கிகொண்டு போயி மாலெ கட்டி புது பொண்ணுங்க்கு ஜோடிச்சி...	121. பறித்துக் கொண்டு போய் மாலை கட்டிப் புதுப்பெண்ணுக்கு அழகு செய்து...
122. பொண்ணு மாப்ளெனுமு அய்ய சுடுகாட்டுங்க்கு ஆங்கள கொஹகி/ பொ3தகி கூட்டி கொண்டு வருட்று	122. பொண்ணு மாப்பிளையை..... அந்த..... சுடுகாட்டிற்கு அண்ணன் சமாதிக்கு அழைத்துக் கொண்டு வருகிறார்கள்.

123.சின்னாங்களெ பொ வெக்கு வருட்று	123.சின்ன அண்ணன் சமாதிக்கு வருகிறார்கள்.
124.கூட்டி கொண்டு வந்து அய்ய கொஹ மேட்டிலியெ நிருத்தினுதுமு அய்னியே பூமியகத்து 'உசுப்பென்று' பக்காந்திட்டு	124. கூட்டிக்கொண்டு வந்து அந்தச் சமாதி மேட்டிலே(யே) நிறுத்தியவுடன் அப்படியே பூமிக்குள் 'தொப்பென்று' போய்விட்டார்கள் / விழுந்து விட்டார்கள்.
125.கதமுடிஞ்சிது. முடிஞ்சு கெயிஞ்சி.	125.இத்துடன் கதை முடிந்தது... முடிந்து விட்டது.

குறிப்புகள்

1. 1991 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படி, தமிழ்நாட்டில் 36அட்டவணைப் பழங்குடியினப் பிரிவினர் (scheduled tribes) உள்ளனர். இவர்களது மொத்த மக்கள் தொகை 5.2. இலட்சம் (1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்கெடுப்பு).

வரலாற்றுக்கால ஓட்டத்தில் நிகழ்ந்துள்ள தொழில் நுட்ப வளர்ச்சியின் தாக்குதல்கள் ஏதுமின்றி, தனிப்பட்ட வாழ்வியல் முறைகளையும் பன்பாட்டுக் கூறுகளையும் கொண்டவர்களாக உள்ளனர். பழங்குடியினப் பொருளாதாரம், பொதுவாக உழவு, வேட்டை, உணவுப்பொருள் சேகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய வாழ்வாதாரப் பொருளாதாரமாகவே(subsistence economy) உள்ளது. பழங்குடியினரது எழுத்தறிவு 7.5 விழுக்காடாகவும் தமிழக அளவில் விழுக்காடாகவும் உள்ளது. கல்வி-எழுத்தறிவு, பொருளாதாரம், உடல்நலம், உணவூட்டம் (nutrition), இந்திய அரசியலமைப்புச்சட்டம் தங்களுக்களித்துள்ள உரிமைகளை அறியப் பெற்றுள்ள திறம் என இந்த எல்லா நிலைகளிலுமே பழங்குடியினங்களுக்கும் பழங்குடியல்லாதோர்க்கும் இடையே, பெரிய இடைவெளி காணப்படுகிறது. இதுபோன்ற காரணங்களினாலேயே பழங்குடியினர் விளிம்பு நிலை மனிதர்களாகவே உள்ளனர்; பழங்குடியினர் அல்லாத இந்தியக் குடிமக்களால் பொதுவாக அங்கீகாரம் பெறாதவர்களாய் அலட்சியத்திற்குள்ளா னவர்களாக உள்ள நிலையே இன்றளவும் நீடிக்கிறது எனலாம். சமூகப் பொருளாதார முன்னேற்றம் தொடர்பான பழங்குடியினர் பொருளாதார முன்னேற்றம் (tribal sub-plan), பழங்குடியினக் குழந்தைகளைக் கல்வியில் மேம்படுத்தும் வகையில் முதலில் பழங்குடியினரது தாய்மொழியில் கல்வி தொடங்கப் பெற்றுப்பின்

படிப்படியாக அதிகார வலிமை கொண்ட மாநில மொழியில் கல்வி பெறச்செய்தல் போன்ற தேசியக்கல்வித்திட்டம் (National Policy Education, 1986) என இவை எதுவுமே பழங்குடியினரிடையே எதிர்பார்த்த மாற்றங்களை-முன்னேற்றங்களை உண்டாக்கி விடவில்லை என்ற கசப்பான உண்மைகளைக் குறிப்பிட்டாக வேண்டும்.

பழங்குடியினர் பொதுவாக இருமொழியாளர்கள் (bilinguals). பெரும்பாலும் பேச்சு வடிவத்திலேயே உள்ள தங்களது மொழியையும் தாங்கள் வாழும் மாநில (அரசியல் வலிமை கொண்ட) மொழியையும் பேசும் ஆற்றல் கொண்டவர்கள். இது பழங்குடியின இருமொழிய நிலை (tribal biligualism) எனப்படும்.பொதுவாக இந்திய இருமொழியத்திலிருந்து (Indian bilingualism) பழங்குடியின இருமொழியம் வேறுபட்டது. இந்தியச் சூழலில் இந்தப் 'பழங்குடியின இருமொழியம்' பழங்குடியினர் தங்கள் தாய்மொழிகளை இழந்துபோவதற்குரிய ஒரு முக்கியக் காரணியாக அமைந்துள்ளதாகத் தெரிகிறது (Annamalai 2001).

2. பழங்குடியினர் அல்லாத எவரையும் இரவல்லர் தங்கள் பேச்சில் கொங்கர் என்றும், தமிழில் கவுண்டர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

3. இரவல்லப் பேச்சு மொழி வகை, இக்கட்டுரையில், தமிழ் எழுத்துகள் மூலமாக அவர்களது மொழி உச்சரிப்புக்கேற்ப இடம்பெற்றுள்ளது. தமிழ் கூட்டெழுத்து முறை (Tamil spelling) பல வேளைகளில் எரவல்லப் பேச்சு முறைக்குப் பொருந்தாது. எனவே இப்பேச்சு வகையில் இடம்பெற்றுள்ள *இருப்பட்று, கொண்டிருப்பட்று* போன்றவை எரவல்லமொழி உச்சரிப்புக்கேற்ப எழுதப்பட்டுள்ளன என்பதை மனதில் கொள்வது நலம்.

துணைநூல்கள்

1. சண்முகம், செ.வை. "சங்க இலக்கிய மொழி அமைப்பு" . *மொழி ஆய்வு*, சிதம்பரம், மெய்யப்பன் பதிப்பகம்,2005.

2. ஞானசுந்தரம், வ. *இந்தியச்சூழலில் மொழி இழப்பு: ஒரு சமுதாய மொழியியல் பார்வை*, சென்னை-தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2010.

3. *விஜயலட்சுமி, த. இரவாளப்பழங்குடிகளின் வாழ்வியல், சென்னை, திருக்குறள் பதிப்பகம், 2008.*

4. Annamalai, E. "Managing multilingualism in India: Political and Linguistic Manifestations" in Udaiyanarayanasingh & Prabol Das Gupta (Eds.), *Language and development volume.* New Delhi: Sage publications. 2001.

5. Burrow, T. 1968. *"Two developments of initial k in Dravidian"* (appeared originally in BSOAS XI 1943-46), *Collected papers on Dravidian Linguistics.* Publication no. 13. Annamalai University.

6. Cre-A: *Dictionary of Contemporary Tamil (Tamil-Tamil-English),* Second edition. Chennai, 2008.

7. *Census of India*, Series 23, Tamilnadu, Part VIII (ii) Special Tables on Scheduled Tribes, Vol.II, 1991.

8. *Emeneau*, M.B. "The Non- literary Dravidian Languages" in *Current trends in Linguistics, Vol.5.* The Hague, 1969.

9. Gnanasundaram,V. and Perialwar, R. *"I, avalla-An Old Tamil Dialect"? Proceedings of the First World Classical Tamil Conference*, Coimbatore. (In press). 2010.

10. Gnanasundaram,V. Perialwar, R. Rangan, K. "Endangerment of Betta Kurumba (Tamilnadu), Betta Kuruba (Karnataka) and UraliKuruman (Kerala)", *International Journal of Dravidian Linguistics*, Vol. 41, No.1. January 2012.

11. Gnanasundaram,V. *A Study of Eravalla.* Department of Linguistics, Coimbatore, Bharathiyar University. 2012.

12. Gnanasundaram,V. & Kamaleswaran, K.S. "Tribal mother tongues of Tamilnadu-Historical Typologies". Paper presented in the National Seminar on *Tamil dialects Through Ages*, Central Institute of Classical Tamil, Chennai and department of Linguistics, Madurai Kamarajar University, Madurai. Jan.09-11, 2013.

13. Perialwar, R. *A grammar of Irula language*, Annamalai University, Annamalainagar,1977.

14. Perialwar, R. "Eravallan", People of India: Tamilnadu. Vol XI. Part One (eds). K.S.Singh, R. Thirumalai and S. Manoharan. *Anthropological Survey of India*. Affiliated East West Press. Private Limited, 411 – 415. 1978.

15. Saraswathi, G. "Eravallan", People of India, Kerala, Vol.XXVII, Part I (eds), K.S., Singh, P. Madhava Menon, Deepak Tyagi, P. Francis Kuli Rani, *Anthropological Survey of India*, New Delhi, Affiliated East-West Press Pvt. Limited: 381-387, 2002.

16. *Tamil Lexicon*. University of Madras, 1936. (Reprinted 1982).

தொல்காப்பியக் கருப்பொருள் மயக்கத்தில் பூ? மா?

க.மோகன்

முன்னுரை

தொல்காப்பிய அகத்திணையியலில் கூறப்பட்டுள்ள கருப்பொருள் மயக்கம் பற்றிய செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கருப்பொருள்

தெய்வம் உணாவே மா மரம் புள் பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல்.அகத்.20)

எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நில பொழுதொடு வாராவாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும் (தொல்.அகத்.21)

கருப்பொருள் மயக்கம்

உரிப்பொருள் அல்லன மயங்கும் என்பதால் கருப்பொருள் மயங்கும் என்பதைக் குறிப்பர் தொல்காப்பியர். திணை மயக்கத்துள் கருப்பொருள் மயங்கும் என்பதை, திணை மயக்கம் ஒரு நிலத்துக்குரிய கருப்பொருள் மற்ற நிலத்தில் வந்து ஒன்றுபடுவது என்பர் இறையனார் களவியல் உரைகாரர்.

ஒரு திணைக்குரிய கருப்பொருள்கள் மற்றொரு திணையிலே சென்று மயங்கினால் (கலந்தால்) அதனை அறிஞர் திணை மயக்கம் என்று கூறுகின்றனர்.

உரையாசிரியர்களின் உரை

இளம்பூரணர்:

இது மேலதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று (இ-ள்) எந் நிலமருங்கின் பூவும் புள்ளும் - யாதானும் ஒரு நிலத்திற்குரிய பூவும் புள்ளும் அந் நிலம் பொழுதொடு வாரா வாயினும் - அந்நிலத்தொடும் பொழுதொடும் வந்தில வாயினும், வந்த நிலத்தின் பயத்த ஆகும் - வந்த நிலத்தின் பயத்த ஆகும்.

வந்தது கொண்டு வாராதது முடித்தல் (மரபு.112) என்பதால் சிறுபான்மை ஏனையவும் வந்த வழிக் கண்டு கொள்க

என்பர் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியர்:

எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நில பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும் (இது முற்கூறிய கருப்பொருட்குப் புறனடை)

எந்நில மருங்கிற் பூவும் புள்ளும் - எழுதிணை நிகழ்ச்சியவாகிய நால்வகை நிலத்துப் பயின்ற பூவும் புள்ளும் அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும் - தத்தமக்கு உரியவாகக் கூறிய நிலத் தொடுங் காலத் தொடும் நடவாமற் பிற நிலத்தொடுங் காலத்தொடும் நடப்பினும் வந்த நிலத்தின் பயத்த ஆகும் - அவை வந்த நிலத்திற்குக் கருப்பொருளாம் என்றவாறு என்பர் நச்சினார்க்கினியர்.

ஒரு 'அதனொடியைந்த ஒரு வினைக் கிளவி' உடன் சேறல் பெரும்பான்மையாயிற்று. வினை செய்யிடத்தினிலத்திற் காலத்தின் என்பதனான் (காலமும் இடப்பொருளில் வருதலின் நிலத்துட் காலமுமடங்குமென்பார். நிலமென்று அடக்கினார் என்றார்.) நிலத்தின் பயத்தவாமெனப் பொழுதினையும் நிலமென்று அடக்கினார். பூவைக் கருவென ஓதிற்றிலரேனும் முற்கூறிய மரத்திற்குச் சினையாய் அடங்கிற்று. ஒன்றென முடித்தலான் நீர்ப்பூ முதலியனவும் அடங்கும். இங்ஙனம் வருமிடஞ் செய்யுளிடமாயிற்று. உதாரணம்,

தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின் (கலித்.52)

இது மருதத்துப் பூ, குறிஞ்சிக்கண் வந்தது.

உடையிவ ளுயிர்வாழா ணிநீப்பி னெனப்பல
விடை கொண்டியா மிரப்பவு மெமகொள்ளா யாயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன (கலித்.3)

இது மருதத்துப்பூ, பாலைக்கண் வந்தது

கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூ ற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னாதார்க் கடந்தடூஉ முரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார் கொல் (கலித்.27)

இது குறிஞ்சிக்குப் பயின்ற மயில் பாலைக்கண் இளவேனிற் கண் வருதலிற் பொழுதொடு புள்ளு மயங்கிற்று. கபிலர் பாடிய பெருங் குறிஞ்சியில் (குறிஞ்சிப்பாட்டு) வரைவின்றிப் பூ மயங்கியவாறு காண்க. பிறவும் இவ்வாறு மயங்குதல் காண்க. ஒன்றென முடித்தலாற் பிற கருப்பொருள் மயங்குவன உளவேனுங் கொள்க.

மேற்கூறிய உரைவிளக்கம் ஏட்டுப்பிரதியோடு ஒப்பிடப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. அறிவியலின் அடிப்படைகளை மரபியலில் கண்டுணர்த்திய தொல்காப்பியர் ஐயப்பாட்டிற்குரிய நூற்பாவினைப் படைத்திருப்பாரா? என்ற வினா எழுகின்றது.

1) கருப்பொருள்களைப் பட்டியலிட்ட அவர், ‘அவ்வகை பிறவும் கருவென மொழிப’ என்று கூறியதன் காரணமாக, மரத்தின் ஒரு சினையாகிய பூவிற்கு உரையாசிரியர்கள் வலிந்து பொருள் கூறுவதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. வினை செய்யிடத்தினிலத்திற் காலத்தின் என்பதனான் (காலமும் இடப்பொருளில் வருதலின் நிலத்துட் காலமுமடங்குமென்பார். நிலமென்று அடக்கினார் என்றார்.) **நிலத்தின் பயத்தவாமெனப் பொழுதினையும் நிலமென்று அடக்கினார்** என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். நிலத்தினை ஐவகையாகவும் பொழுதுகளைப் பெரும்பொழுது, சிறுபொழுது என்று அவற்றுக்குத் தகுந்த விளக்கங்களைக் கொடுத்துள்ளார் தொல்காப்பியர். அவ்வாறிருக்கப் பொழுதினை நிலமென்று அடக்கினார் என நச்சினார்க்கினியர் கூறுவதை எடுத்துக் கொண்டால், தேவையற்ற ஒன்றினைத் தொல்காப்பியர் இவ்விடத்தில் குறிப்பிடுவதற்கு யாது காரணம் என அறியப்படவில்லை. செய்யுள்களில் இவை ஒன்றாகலாம் என்று நச்சினார்க்கினியர் ஓர் இடர்ப்பாடுடன் வலிந்து பொருள் கூறுகிறார் என்றே கூற இடமளிக்கிறது. (இதில் பறவையைக் குறிப்பிடும் போது நிலமும் பொழுதும் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. கலி.27). (நிலம் - பாலை; இளவேனில்-பொழுது).

2) ‘பூவைக் கருவென ஓதிற்றிலரேனும் முற்கூறிய மரத்திற்குச் சினையாய் அடங்கிற்று. ஒன்றெனமுடித்தலான் நீர்ப்பூ முதலியனவும் அடங்கும். இங்ஙனம் வருமிடஞ் செய்யுளிடமாயிற்று’ என்று நச்சினார்க்கினியர் கூறுகிறார். கருப்பொருள் பட்டியலில் இடம் பெறும் மரத்தை நேரடியாகவே மரமும் புள்ளும் என்று தொல்காப்பியர் கூறாமல், மரத்தின் சினையாய் உள்ள பூவினை ஏன் கூறினார் என்ற வினாவும் பெறப்படுகிறது.

ஒரு நிலத்தில் காணப்படும் மரங்கள் வேறு நிலத்தில் காணப்படும் என்றாலும், அவை கால நிலைக்குத் தக்கவாறு பூக்கும் இயல்புடையன. இவ்விடத்தில் உரைகாரர் குறிஞ்சிப்பாட்டினை உதாரணம் காட்டிக் குறிப்பிட்டுள்ளதையும் விளக்குதல் வேண்டும். இருநூற்றெழுபத்தொன்பது செய்யுள்களில், தொண்ணூற்றொரு செய்யுள்கள் குறிஞ்சித்திணை என்னும் அகப்பொருள் பற்றியன. அதில் 99 வகையான பூக்களைப் பாடுகிறார் கபிலர்.

இவை வெவ்வேறு நிலங்களில் வெவ்வேறு பொழுதுகளில் பூக்கும் இயல்புடையன. ஈண்டுத் தோழி, தலைவி இருவரும் மாலங்குடையராய்ப் பலகாலும் திரிந்து கொய்து குவிக்கும் மலர்களிற் பெரும்பாலும் சூடும்பூக் காண்டல் அரிதாம்! என்னை? மாம்பூவும், தெங்கம்பாளையும், எருக்கம் பூவும், இண்டகம்பூவும், சூரைப்பூவும், மூங்கிற்பூவும், வாழைப்பூவும், பிறவும் இவ்வுலகிற் பித்தரும் சூடக்காண்கிலேமே! சூடுமரபில்லா இம்மலர்களைக் கொய்து குவித்ததூஉமன்றி, அவையிற்றைப் பல்வேறுருவின் வனப்பமை கோதையாகப் புனைந்தனம் என்றும், அக்கோதைகளை மெல்லிருமுச்சி கவின்பெறக் கட்டினேம் என்றும், தோழி கூறுதல் இயற்கைக்கு முரணாய குற்றமாம் அற்றன்று. இச்செயல் உலகியற்கை மாத்திரைக்கே முரணென்றும், ‘பாடல்சான்ற புலனெறி வழக்கம்’ என்னும் கலையுலகிற்கு இயற்கையே என்றும் கொள்க என்பர் பொ.வே.சோமசுந்தரனார்.

இப்பாடல் ஆரியவரசன் பிரகத்தத்தனுக்குத் தமிழறிவுறுத்து முகத்தான் பாடப்பெற்றதாகும். தமிழின் ஆழத்தையும் வளத்தையும் குறிப்பதற்குப் புலவர் தம் புலமையின் திறத்தால் உயர்வுடையதாக்கியிருக்கிறார். கற்பனை மேலோங்கியிருக்கிறது. இது புலனெறி வழக்கமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

3) சில வகைப் பூக்களின் தன்மைகள் கீழ்வருமாறு: குறிஞ்சிப்பூ ஒன்பது ஆண்டுகளுக்கொருமுறை தோன்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் வரை தொடர்ந்து காணப்படுகின்றது. ஸ்ட்ரொபிளான்த்தெஸ் (Strobilanthes) என்ற இனத்தைச் சேர்ந்தது. மலைச்சாரல்களில் பல்லாயிரக்கணக்கான பூக்கள் ஒரே கூட்டமாகக் காணப்படும். கருங்கோற் குறிஞ்சி யடுக்கம் (புறம்.37) என்று குறிஞ்சிப் பூக்களின் கூட்டத்தைப் பாடுகிறார் புலவர். நீலநிறப் பூக்களை உடைய குறிஞ்சிப்பூ நீலகிரியில் மட்டுமே காணப்படுவதாகச் செடி நூலறிஞர் கூறுகின்றனர்.

மருதப்பூ அல்லது மருதமரங்கள் நீர் நிலைக்கு அருகாமையிலும் ஆற்றோரங்களிலும் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

கரைசேர் மருதமேவி.... (ஐங்.74)

தாழ்சினை மருதந் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் பொலியப் போர்பழித்துக் (அகத்.361)

உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நனிப் படிகோடு ஏறிசீர் மிக (புறம்.243)

துறைநனி மருத மேறித் (பதிற்றுப்பத்து, 27)

வரும்புனல் வையை மருதோங்கு முன்றுறை (சிலம்பு. 7,2)

மருதமரம் ஆற்றருகே இயற்கையாகவே பெரிதும் காணப்படும் என்று செடி நூலில் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். சங்க நூல்களில் மருதம் ஆற்றருகே, துறையருகே காணப்பட்டதாகத் தெளிவாகப் பலவிடங்களிலும் கூறப்பட்டிருப்பது உண்மையான செய்தியாகும்.

> 'சங்க காலத்திலும் பின்னால் தேவாரக் காலத்திலும் மருத மரங்கள் நீர்த்துறைகளில் சூழலாகக் காணப்பட்டன என்று நன்கு தெரியவருகிறது. திருமருதமுன்றுறை, திருமருத நீர்ப்பூந்துறை என்றெல்லாம் பல பாடல்களில் கூறப்படுவதிலிருந்து மருதமரங்கள் நீர்த்துறைகளை அணி செய்வனவாகப் பழந்தமிழர் கருதினர்' என்பது நன்கு விளங்கும்.

என்பர். பி.எல்.சாமி (பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம், ப.47). முல்லை ஒரு பற்றுக்கொடி வகையாகும். இதனை,

சிறுவீ முல்லைக் கொம்பிற் றாஅய் (குறுந்.348)

என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது. முல்லைச்செடி கார்காலத்தில் பூப்பதாகச் சங்க நூல்களில் பலவிடங்களில் காணப்படுகின்றது. மழை பெய்தலைப் பார்த்துப் பூப்பதாகவும் கூறுவர். முல்லைச்செடி கார்காலத்தில் பூப்பதாகச் செடிநூலும் கூறுகின்றது. தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவத்தில், மழைக்காலமான ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை பூப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. (தற்போது பருவக்

கால மாற்றத்தில் வடகிழக்குப் பருவ மழை அக்டோபரில் தொடங்குகிறது.) முல்லைச்செடியை Jasminum Auriculatum என்று தாவர நூலார் தெரிவிக்கின்றனர்.

கடலும் கடல் சார்ந்த இடங்களில் காணப்படுவது நெய்தல் செடியாகும். இருங்கழி நெய்தல் என்று குறுந்தொகைப் (336) பாடல் கூறுகிறது. இருங்கழி ஓரத்தில் கழிசேர் மருங்கில் நெய்தல் மலர்வதாகக் கூறப்பட்டிருக்கின்றது. செடி நூலிலும் மேற்குக் கடற்கரையில் கழிகளில் (Backwaters) காணப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

> 'நெய்தல் மலர் நன்றாக இலைகளுக்கு மேல் வெளியே நீட்டிப் பூப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. கணைக்கால் நெய்தல் என்று பலவிடங்களில் பேசப்படுகின்றது. கண்போல் நெய்தல் என்றும் கூறப்படுகின்றது. நெய்தல் மலர் கருநீலமானது. அதனால் அதைக் கருப்பு நிறமானது என்றே கூறுவர். இதன் நிறம் கருமை என்று கருதியே கண்ணுக்கு உவமிக்கப்பட்டது. இதன் பூவை மணிப்பூ என்றும் கூறுவர். மணிபோல் நீல நிறத்தையுடைய பூவென்று பொருள் கொள்ள வேண்டும். நெய்தல் மலர் நறுமணமுடையது என்றும் இதன் தாதை வண்டினம் விரும்புவதாகவும் கூறப்பட்டுள்ளது'

என்பர் பி.எல்.சாமி (ப.58). பாலை என்பது முல்லையும் குறிஞ்சியும் திரிந்த வடிவம் என்று கூறுவர். வறட்சியான நிலத்தையும் பாலை என்று கூறுவர். அத்தம், சுரம் என்று பாலை நிலத்தை வழங்குவர். மழையற்ற வறட்சியான பாலை நிலத்துக்குரியதாகப் பாலை மரம் சங்ககாலத்தில் வழங்கப்பட்டது.

> உள்ளுதொறு நகுவேன் றோழி வள்ளுகிர்ப்
> பிடிபிளந் திட்ட நாரில்வெண் கோட்டுக்
> கொடிறுபோல் காய வாலிணர்ப் பாலைச்
> செல்வ(ளி) தூக்கலி னிலைதீர் நெற்றங்
> கல்லிழி யருவியி னொல்லென வொலிக்கும் (நற்.107)

என்ற நற்றிணைப் பாடலில் பாலை மரம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. "பாலை மரத்தின் இலைகள் சனவரி-பிப்ரவரியில் விழுந்துவிடுகின்றன. அதே சமயத்தில் தான் அதன் காய்கள் நன்றாக முற்றி நெற்றாக மாறுகின்றன. இதையே நற்றிணை வரிகள்

> 'இலைதீர் நெற்றங் கல்லிழியருவியின் ஒல்லென ஒலிக்கும்' என்று
> இலை தீர்ந்த காலத்தில் காற்றில் ஒலித்ததாகக்கூறின".

இதுவும் செடிநூற்படி உண்மையான செய்தி என்பர் பி.எல்.சாமி (ப.63). மழைக்காலங்களில் வேலி ஓரங்களில் பூத்துக் குலுங்கும் பூ காந்தள் ஆகும். கார்த்திகைக் காலங்களில் பெரும்பாலும் பூப்பதால் இதைக் கார்த்திகைப் பூ என்று வழங்கினர். பிற காலங்களில் வேலியில் கொடியாகப் படர்ந்திருப்பதை எளிதாகப் பிரித்துணர முடியாது. காந்தள் ஒரு கொடியாகும். நீர் நிறைந்த சூழ்நிலையில் காந்தள் எங்குப் பார்த்தாலும் கார்காலத்தில் பூத்துக்கிடப்பதைக் காணலாம். காந்தள் வேலியில் பூப்பதாகச் சங்க செய்யுட்கள் கூறும் செய்தி இன்றும் தமிழ்நாட்டில் காணக்கூடியதாகும். நெடுஞ்சாலைகளில் கூட உற்றுநோக்குவோர்க்கு மழைக் காலத்தில் காந்தள் வேலியோரங்களில் பூத்துக் குலுங்குவது நன்கு தெரியும். சங்க நூல்களில் காந்தள் மலைச் சாரலில் பூப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

காந்தட் கமழ்குலை யவிழ்ந்த நயவருஞ் சாரல் (நற்.185)

என்ற பாடலின் வழி அறியலாம். மழைக்காலத்தில் திடீரென்று தோன்றுவதும் காந்தளுக்குச் சிறப்பான தன்மையாகும்.

> "முருக்கமரம் (Butea Frondosa) என்பது ஆங்கிலத்தில் Flame of the Forest என்று அழைக்கின்றனர். 'பொங்கழல் முருக்கு' என்று அகநானூறு கூறுகின்றது. முருக்கமரம் இளவேனிற்காலத்தில் பூப்பது உண்மையான செய்தியாகும். மார்ச்- ஏப்ரலில் தான் பூக்கின்றது. கலித்தொகையில் (33) 'பிணிவிடு முருக்கிதழ் அணிகயத் துதிர்ந்துக' என்று கூறப்படுவதைக் கவனிக்க வேண்டும். 'முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற ழடைகடை' என்று பதிற்றுப்பத்து கூறுகிறது. முருக்கமரத்தைக் குளங்கள், ஏரிகளின் ஓரங்களில் அழகுக்காக வளர்த்தனர் என்று தெரிகின்றது. இன்றும் சில இடங்களில் ஏரி ஓரங்களில் முருக்கமரம் வளர்கின்றதைக் காணலாம். முற்றிய பருவத்தில் பூவிதழ் கீழே விழுந்து பரவிக்கிடப்பதையும் குறிப்பிட்டுப் பாடியிருக்கின்றனர். இதன் பூவையும் முள் முருங்கை என்று கூறப்படும் கவிர்ப் பூவையும் பறவைகள் விரும்பிக் கொத்தித் தின்னும். இதனால் பறவைகளின் வழியாகப் பூவின் தாது பரப்பப்பட்டு இதன் பூ கருவுறுவதாகச் செடிநூலார் கூறுவர்"

என்பர் பி.எல். சாமி (ப.95).

கொன்றை (Cassia Fistula) வறட்சியான பகுதிகளிலும் கற்பாங்கான இடங்களிலும் இயற்கையாகக் காணப்படும் மரமாகும். சங்கப் பாடல்களிலும் கொன்றை முல்லையிலும் பாலையிலும் பயில்வது இயற்கையில் காணப்படும் செய்திக்கொத்ததேயாகும் என்பர் பி.எல்.சாமி (ப.108).

புன்னைமரம் Colophyllum Inophyllum என்றும், Alexandrian Laurel என்றும் அழைக்கப்படுகின்றது. கடற்கரையோரத்தில் ஒருசில மரங்களே வளரக் கூடியவை. கடற்கரைக்குச் சிறிது தள்ளிக் காணப்படும் கானலில் வளரும் மரங்களில் மிகவும் எளிதாகவும், பொதுவாகவும் காணப்படுவது புன்னை மரமென்று செடிநூலார் கருதுகின்றனர். புன்னை மரத்தை நெய்தல் திணைக்குரிய மரமாகக் கடல்சார்ந்த இடத்தில் காணப்படுவதாகச் சங்க நூல்களில் பலவிடங்களில் பாடப்பட்டிருக்கின்றது.

இருடிணிந் தன்ன வீர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மண லொருசிறைக்
கருங்கோட்டுப் புன்னை பூம்பொழில் புலம்ப (குறுந்.123)

என்று குறுந்தொகை கூறுவதிலிருந்து நிலவொளியைக் குவித்தாற் போன்றுள்ள வெண்மணலில் புன்னைமரம் காணப்படுவதாக அறியப்பெறுகிறது.

ஒரு நிலத்தில் காணப்படும் தாவரங்கள் வேறொரு நிலத்தில் அரிதாகக் காணப்படும். கார்காலத்தில் பூக்கும் தன்மையுடையன கோடையில் பூப்பதில்லை. அவ்வாறிருக்க நிலத்தொடும் பொழுதொடும் என்ற சொற்றொடரை தொல்காப்பியர் பயன்படுத்தியது ஏனோ? சிறுபான்மையாக வருவனவற்றிற்கு இவ்வளவு முக்கியத்துவம் தேவைதானா? ஓரிடத்தில் காணப்படும் பூக்கள் மகரந்தச் சேர்க்கையின் வழியாக வேறொரு இடத்தில் காணப்படும் என்ற தவறான பார்வை காணப்படுகின்றது. பூக்கள் அருவியின் வழியாக மலையிலிருந்து வேறொரு இடத்திற்குச் செல்லும் தன்மையுடையன என்ற வாதமும் கூறப்படுகிறது. ஒரு தாவரத்தில் மகரந்தச் சேர்க்கை நடைபெற வேண்டுமெனில் அதே இனம் ஏற்கெனவே அங்கே இருக்க வேண்டும். முல்லைப்பூவின் தாது வாகைப்பூவோடு இணைவதில்லை என்பதைத் தெரிந்து கொள்ளாமல் மகரந்தச் சேர்க்கையின் வழி வேறு நிலத்தில் பூ காணப்படலாம் என்று கூறப்படுகிறது. தாவரங்கள் வளர்வதற்கும் அவற்றில் பூக்கள் பூப்பதற்கும் அடிப்படையானது விதையாகும். (மரத்திற்கு உயிர் உண்டு; பூவிற்கு உயிர் இல்லை)

வாழை போன்ற தாவரங்கள் அவற்றின் கன்றுகள் வழி பெருக்கம் அடைகின்றன. காட்டிலுள்ள வாழைக்கனிகளில் விதைகள் காணப்படுவதுண்டு. கோகஸ்நுசிபெரா என்றழைக்கப்படுகின்ற தென்னையின் தாயகம் இந்தோனேசியா. அதன் காய்கள் கடலலையின் வழியாகப் பிற நாடுகளுக்கும் பரவின. கடற்கரைப் பகுதிகளில் தென்னை அதிகமாகக் காணப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். அகாசிகா அரேபிகா என்றழைக்கப்படுகின்ற கருவேல முட்செடிகள் அரேபியாவிலிருந்து இந்தியாவில் அதன் விதைகள் தூவப்பட்ட வரலாறு அனைவரும் அறிந்ததே. பூக்களினால் ஓரிடத்திலிருந்து பிற இடங்களுக்குச் செல்லும் இயல்பு குறைவானது. அவ்வாறு சென்றாலும் அதன் ஆயுட்காலம் மிகச் சிறிதே.

மேற்கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியரது பூவும் புள்ளும் என்னும் நூற்பாவை உற்று ஆராயின், அதன் பாட பேதம் தெளிவாகப் புலப்படும். பூவும் புள்ளும் என்ற சொற்களுக்குப் பதிலாக மாவும் புள்ளும் என்றே தொல்காப்பியர் நூற்பா இயற்றிருக்க வேண்டும். பின்னர் வந்தவர்கள், நூற்பாவில் தெரிந்தோ, தெரியாமலோ மாற்றம் செய்திருக்க வேண்டும். ஓசை நயத்திற்காகவும் இதனைச் செய்திருக்க வாய்ப்புண்டு. அன்றி, எழுத்துக்களின் வரிவடிவங்கள் காரணமாகவும் இருந்திருக்கலாம். மா என்பதற்குப் பதிலாகப் பூ என்று மாற்றம் அடைந்துள்ளதை அறிஞர்கள் கவனிக்கத் தவறிவிட்டார்கள் எனலாம். 'எந்நிலம் மருங்கினும் மாவும் புள்ளும்' என்றிருந்தால் எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடமில்லாமல் இருக்கும். ஏனெனில் விலங்கும், பறவையும் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு இயல்பாகச் செல்லும் இயல்புடையதாதலால், எந்நிலத்திலும் எப்பொழுதிலும் மாவும், புள்ளும் காணப்படும். பறவையைக் குறிப்பிட்ட தொல்காப்பியர் எந்தவிதத் தொடர்பும் இல்லாத பூவினைக் குறிப்பிட்டிருக்க வாய்ப்பில்லை. பறவையைப் போன்று இடம்விட்டு இடம்பெயர்ந்து செல்லும் இயல்புடைய விலங்குகளைத்தாம் குறிப்பிட்டிருப்பார். பறவையைப் போன்று வேறு நிலத்திலும், வெவ்வேறான

பொழுதுகளிலும் விலங்குகள் காணப்படும் தன்மையுடையன. நூற்பாவின் குறையினைக் கவனிக்காமல் பூவிற்காக வலிந்து பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நிலத்தின் பயத்தவாமெனப் பொழுதினையும் நிலமென்று அடக்கவும் தேவையில்லை. உரையாசிரியர்களின் உரைகளில் எந்தவிதத் தவறும் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் தொல்காப்பியரின் ஏட்டுச் சுவடியிலிருந்து பிரதி எடுத்த ஏட்டுச் சுவடியைப் பார்த்து உரை எழுதிவிட்டார்கள் உரையாசிரியர்கள். கருப்பொருளில் 'பிறவும் கருவென மொழிப' என்று சொல்லப்பட்டிருப்பதினாலே பூவைக் கையாண்டிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. கருப்பொருளாகத் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் என்று தெளிவாகக் குறிப்பிட்ட தொல்காப்பியர், அடுத்த நூற்பாவில் மாவும் புள்ளும் என்று எதார்த்தமான நடைமுறையினை விட்டுவிட்டு மரத்தின் ஒரு சினையாகிய பூவினைக் குறிப்பிட்டிருக்க மாட்டார் என்றே துணியலாம். தமிழர்கள் அறிவியல் நுட்பத்தினைப் பெற்றிருந்தார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். இவ்வாறு மாற்றம் பெறுவதினால் திணை மயக்கத்திற்கு யாதொரு குறைபாடும் ஏற்படாது.

> எந்நில மருங்கின் மாவும் புள்ளும்
> அந்நில பொழுதொடு வாராவாயினும்
> வந்த நிலத்தின் பயத்த வாகும் (தொல்.அகத்.21)

என்பதே உண்மையாகவும் பொருத்தமாகவும் அமையும் என்பதில் எவ்விதக் குழப்பமும் குறைபாடும் இல்லை எனலாம்.

துணை நூல்கள்

1. ஓம் தொல்காப்பிய முனிவரால் இயற்றப்பட்ட தொல்காப்பியம் பொருளதிகாரம் முதல் பாகம் முன்னைந்தியல்களும் நச்சினார்க்கினியமும். இவை புன்னாலைக் கட்டுவன் தமிழ் வித்துவான் பிரமஸ்ரீ சி.கணேசையர் அவர்கள் ஏட்டுப் பிரதிகளோடு ஒப்புநோக்கித் திருத்திய திருத்தங்களோடும் எழுதிய உரைவிளக்கக் குறிப்புக்களோடும் ஈழகேசரி அதிபர் நா.பொன்னையா அவர்களால் தமது சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் பதிக்கப்பட்டன, 1948.

2. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி -6, சென்னை-1, 1967.

3. பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ), குறிஞ்சிப்பாட்டு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 522, டி.டி.கே. சாலை, சென்னை-16, 2000.

4. தொல்காப்பிய ஏட்டுச் சுவடி எண்.628, தஞ்சை சரசுவதி மகால், தஞ்சாவூர்.

மொழியும் பண்பாடும்: திராவிட உறவுமுறைச் சொற்களை அடிப்படையாகக் கொண்ட மானிடவியல் ஆய்வு

சண்முகராஜா சிறிகாந்தன்

மொழி என்பது பண்பாட்டின் ஒரு கூறாகவும், உலகப் பண்பாட்டுப் பொதுமையாகவும் காணப்படுகிறது. இதனைப் பொதுவாகத் தொடர்பு ஊடகமாகவே அறிஞர்கள் நோக்குகின்றனர். எனினும் மொழியின் சமூகப் பரிமாணம் என்பது இன்று உலகளாவிய நிலையில் பரந்து விரிந்து காணப்படுகிறது. உலகமயமாதலை வரையறை செய்வோரில் குறிப்பிட்ட சில பிரிவினர் 'உலகமயமாதல்' என்பது 'ஆங்கில மொழிமயமாக்கம்' என வரையறை செய்கின்றனர். உலகின் பொதுவான தொடர்பு மொழியாக ஆங்கில மொழியினை ஏற்படுத்துதலே இதன் வெளிப்பாடாகும். மொழி பற்றிய பல்வேறு வாதங்களும், கலந்துரையாடல்களும் பல்வேறு தளங்களில் நிகழ்ந்து வருகின்ற சூழலமைவில் மானிடவியலாளர்கள் மொழியினைச் சமூகப் பண்பாட்டு மூலங்களின் ஒரு முதன்மையான கூறாகவே நோக்குகின்றனர். இந்நிலையில் மொழியும் பண்பாடும் மனித வாழ்வினைப் பூரணமாக்கும் ஒரு பகுதியாகவே காணப்படுகின்றன.

மானிடவியல் போன்று மொழி தொடர்பான ஆராய்ச்சியை இரண்டு பிரதான அலகுகளில் உள்ளடக்கி நோக்கமுடியும். உயிரியல் நிலையில், பண்பாட்டு நிலையில் மொழி தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மனிதனை விலங்கினங்களிலிருந்து பிரித்துக்காட்டும் முக்கியப் பண்பாட்டுக் கூறு மொழியாகும். விலங்குகளால் மனிதனைப் போன்று மொழியினைச் சிறந்த வினைத்திறனுடன் கையாள முடியாது. அண்மைக் காலத்தில் விலங்கின நடத்தைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள் ஏன் விலங்குகள் மனிதனைப் போன்று மொழியியல் கூறுகளை விருத்தி செய்யவில்லை என்பதற்கு அவற்றின் மூளையின் அளவு, அமைப்பு போன்றவற்றினையே காரணமாகக் குறிப்பிடுகின்றனர்.

மனித இனத்தின் உயிரியல், சமூகப் பரிணாமத்தில் நாகரிகம் அடைந்துள்ள இன்றைய மக்கள் கூட்டத்தினர் மொழியின் பயன்பாட்டின் பின்னரே யதார்த்த மனித நிலையினை அடைந்தார்கள் (□□□□□□ 1989:33). இதனால் இன்று மனிதப் பண்பாட்டில் நடுநாயகமாக மொழி காணப்படுகின்றது. இன்று உலகில் 3000த்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. எனினும் 3000த்திற்கு அதிகமான மொழிகள் வழக்கிழந்து மறைந்துகொண்டிருக்கின்றன (William 1990: 207).

மொழி தொடர்பான ஆய்வுகள் தொடக்கக் காலத்திலிருந்து மொழியியல் வல்லுநர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், மொழியியல் தொடர்பான ஆய்வென்பது மானிடவியல் துறையுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. மானிடவியலின் பிரதான உட்பிரிவுகளில் ஒன்றாக 'மொழியியல்சார் மானிடவியல்' காணப்படுகின்றது. இது சமூக வாழ்வில் எப்படி மொழி செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது தொடர்பாக ஆய்வு செய்கின்றது.

முதலாம் உலகப்போருக்குப் பின்னைய காலப்பகுதியில் மொழியியல்சார் மானிடவியலாளர் எட்வேட் சப்பிர்

> மொழியினுடைய இலக்கணக் கட்டமைப்பின் ஊடாகப் பண்பாட்டு நடத்தைகள் நனவிலி நிலையில் வடிவமைக்கப்படுகின்றன' என்ற கருத்தினை முன்வைத்துள்ளார். மேலும் ஒவ்வொரு மொழியும் ஒத்த அமைப்புக் கோலத்தினைக் கொண்டிருக்கின்றது. அது தனியன்கள் ஒருமித்த நிலையில் உலகத்தினை நோக்குவதற்கான வழிமுறையினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது (மேலது. 1990: 213)

எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சப்பிர் வூர்ப் மொழியும் பண்பாடும் ஒன்றை யொன்று செல்வாக்குச் செலுத்துகின்ற பொருண்மைகளாக விளங்குகின்றன என்கிறார். இந்நிலையில் இவ்வாய்வானது மொழிக்கும் பண்பாட்டுக்கும் இடையிலான உறவினைத் திராவிட உறவுமுறைச் சொற்களின் வழியே பகுப்பாய்வு செய்ய முயல்கின்றது.

மனிதப் பண்பாட்டுப் படிமலர்ச்சியில் மனிதனை நாகரீக நிலைக்கு இட்டுச் சென்ற மூலங்களில் மொழி முதன்மையிடம் பெறுகின்றது. ஏனெனில் ஒரு தனியன் தனது எண்ணத்தில் தோன்றிய சிந்தனையை அதே நிலையில் பிறிதொருவருக்கு எடுத்துக் கூறுவதற்குப் பிரதான கருவியாக விளங்குவது மொழியே ஆகும். பண்பாட்டுப் படிமலர்ச்சியில் முக்கியக் காரணியான கருத்துப் புரட்சிக்கும், கருத்துநிலை மாற்றத்திற்கும் அடிப்படையாக மொழியே அமைந்துள்ளது. மொழியியல்சார் மானிடவியலாளர் மொழியினை அவற்றின் அமைப்பின் அடிப்படையில் ஒலியன்கள், இலக்கணங்கள் எனும் இரண்டு பிரிவுகளாகப் பாகுபடுத்துவார்கள். எனினும் இவை இரண்டுக்கான அர்த்தங்கள் பண்பாட்டின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. உறவுமுறைச் சொற்களுக்கான அர்த்தங்களும் கூட, குறித்த பண்பாட்டின் அடிப்படையிலேயே வழங்கப்பெற்று வருகின்றன. இது மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்துகிறது.

பயன்பாட்டின் அடிப்படையில் ஒலியன்கள் சார்ந்த மொழி, குறியீடு சார்ந்த மொழி, உடலசைவு சார்ந்த மொழி என மொழியினை வகைப்படுத்தி நோக்கலாம். இவற்றுள் உறவுமுறைச் சொற்கள் ஒலியன்சார்ந்த நிலையிலும் குறியீட்டு நிலையிலும் சமூகத்தில் தொழிற்படுகின்றன. குறிப்பிட்ட நபரை விளிக்கும் போது வெளிப்படும் ஒலியன்கள் வயது, பால், நெருக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் பேசுநருக்கும் (ego) விளிப்பவருக்கும் இடையிலான தொடர்பினை வெளிக்காட்டுகின்றன. மறுபுறத்தில் சமூக வலைப் பின்னலில் குறித்த நபருக்கும் பிறிதொரு நபருக்கும் இடையிலான உறவு முறையினைச் சுட்டும் சொற்களானவை பல்வேறு சமூகக் குறியீட்டுவியல் தன்மையினை வெளிப்படுத்திவிடுகின்றன. இந்தக் கருத்துநிலையின் பின்புலத்தில் தான் இவ்வாய்வு மொழிக்கும் பண்பாட்டுக்கும் இடையிலான உறவினைத் திராவிட உறவுமுறைச் சொற்களினை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்கின்றது.

உறவுமுறை என்பது மானிடவியல் ஆய்வுகளில் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது; மறுபுறத்தில் தொடக்கக் காலம் முதல் மானிடவியல் ஆய்வுகள் மனித சமூகத்தின் உறவுமுறைகளை மையமிட்ட வகையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் மையக்காலப் பகுதியிலிருந்து மானிடவியலில் உறவுமுறை தொடர்பான ஆய்வுகள் முதிர்ச்சித் தன்மையான தொடர்பினைக் கொண்டதாக இருந்து வருகின்றன. 1871இல் உலகப் பிரசித்திபெற்ற மானிடவியலாளர் லூயிஸ் ஹென்றி மார்கன் மனிதக் குடும்பங்களின் இரத்தஉறவு மற்றும் மணஉறவு ஒழுங்கமைப்பு (L.H. Morgan, 1871: Systems of Consanguinity and Affinity of the Human Family) பற்றிய ஆய்வொன்றினை மேற்கொண்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு சமூகத்திலும் உறவுமுறை ஒழுங்கமைப்பானது அந்தந்தச் சமூகத்தின் பண்பாட்டினால் உருவாக்கப்படுகின்றது. பிறிதொரு வகையில் கூறினால் உலகில் உள்ள ஒவ்வொரு சமூகமும் தத்தமக்கென உறவுமுறைப் பண்பாட்டினைக் கொண்டுள்ளன. இவ்வகையான உறவுமுறை ஒழுங்கமைப் பானது அச்சமூகக் கட்டமைப்பிற்கு இடையிலான தொழிற்பாட்டினை விளங்கிக் கொள்வதற்கு உதவுகின்றது. உறவுமுறைகள் பற்றிய ஆய்வுகள் மொழியியல், சமூகவியல், மானிடவியல் ஆகியனவற்றிற்கு அப்பால் வரலாற்றியலுடனும் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. உறவுமுறை தொடர்பான ஒரு முறையான ஆய்வானது மார்கன் (L.H. Morgan), மக்லென்னன் (J.F.McLennan), ஹென்றி மைன் (Henry Maine), பக்கோபன் (J.Bachofen) போன்ற பல்வேறு மானிடவியல் அறிஞர்களால் உலகளாவிய நிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக, திராவிட உறவுமுறை பற்றிய ஆய்வில் ட்ரவுட்மன், லூயி தூய்மோன் போன்றவர்கள் முதன்மையானவர்கள்.

அதிகமான அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் உறவுமுறை என்பது உயிரியல் ரீதியான அமைப்பு என்றோ அல்லது நேரடியாக இருவருக்கிடையிலான உயிரியல் ரீதியான பிணைப்பினை வெளிப்படுத்துகின்ற ஒன்றாகவோ கருதுகின்றனர் (Murphy, *1989:106*). ஆனால் திராவிட உறவுமுறையானது பண்பாட்டியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டது. திராவிட உறவுமுறைச் சொற்கள் (Dravidian Kinship Terminology) என்பது எதிரிடைத் தன்மை வாய்ந்த ஒன்றாகும். இது தலைமுறை வேறுபாடு, பால் வேறுபாடு, மணவுறவுக்கான உறவுக் குறியிட்டியல் வேறுபாடு, வயது வேறுபாடு எனும் நான்கு கொள்கைகளினுடைய நேர்நிலையான பல விடயங்களின் கூட்டிணைவிலிருந்து மேலெழுந்த ஒன்றாகக் கருதமுடியும் (Dumont *1953: 39*).

உறவுமுறைச் சொற்கள், உறவுமுறை பற்றிய ஆய்வின் மையங்கள். இவை அனைத்துச் சமூகத்திற்கும் பொதுவானவை, ஆனால் அங்குப் பயன்படுத்தப்படும் சொற்களும் அதற்கான பண்பாட்டுப் பெறுமானங்களும் வேறுபட்டவை. ஒவ்வொரு பண்பாட்டிலும் வேறுபட்ட மணவுறவு விதிகள் வழக்கத்தில் உள்ளன. இவ் விதிமுறைகள் அச் சமூகத்தின் மனித நடத்தைகளை ஒழுங்கமைப்பதில் பிரதான இடத்தினைப் பெறுகின்றன. இன்னொருவகையில் கூறினால் உறவுமுறைச் சொற்கள் தாம் சார்ந்திருக்கும் பண்பாட்டு வலைப் பின்னலுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றன. உறவுமுறைச் சொற்களுக்கான சமூகஅங்கீகாரமும், பண்பாட்டு ஏற்றுக் கொள்ளலும் இல்லாத போது அச். சொற்கள் செயல்பாட்டினை இழந்துவிடுகின்றன. இதனால்தான் உறவுமுறைச் சொற்கள் மனிதனுடைய அடிப்படைச் சொற்களஞ்சியங்களின் ஒரு பகுதியாகத் தொடர்ந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக, குழந்தைப் பருவத்தில் அதிகம் பயன்பாடுடையனவாக உறவுமுறைச் சொற்கள் காணப்படுகின்றன. முதல்நிலைப் பண்பாட்டுவயமாக்கச் செயல்முறையுடன் உறவுமுறைச் சொற்களும் அவற்றின் சமூகப் பெறுமானங்களும் ஒரு தனியனுக்குப் படிப்படியாகக் கிடைக்கின்றன.

மார்கன் உறவுமுறைச் சொற்கள் மொழியினுடைய பகுதிகள் என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை மெற்கொண்டார். ஏனெனில் உறவுமுறைச் சொற்கள் மிகவும் தர்க்கரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மேலும் இவை ஒவ்வொரு மொழியினுடைய இதயம் போன்றவை (Trautmann *2009: 56*).

மொழியியலாளர்கள் உலகின் அனைத்து மொழிகளினையும் அவற்றின் அமைப்பு, ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளனர். அவ்வாறு வகைப்படுத்தப்பட்ட மொழிகளைக் 'குடும்பம்' என்ற சொல்லினால் பொதுமைப்படுத்துகின்றன. ஒவ்வொரு குடும்ப மொழிகளும் பல்வேறு தனித்தன்மை வாய்ந்த மொழிகளின் கூட்டு இணைவுடனே வகைப்படுத்தப் பட்டுள்ளன. அந்தவகையில் ஆப்பிரிக்க-ஆசிய (Afro-Asiatic), அல்ரைக் (Altaic), அவுஸ்திரேலிய-ஆசிய (Austro-Asiatic), திராவிட (Dravidian), பின்னோ-உக்ரிக்

(Finno-Ugric), இந்தோ-ஐரோப்பிய (Indo - European), சீன-திபெத்திய (Sino - Tibetan) மொழிக் குடும்பம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன (William 1990). இவ்வனைத்து மொழிக் குடும்பங்களிலும் திராவிட, இந்தோ-ஐரோப்பிய ஆகிய இரு மொழிக் குடும்பங்களும் இந்தியப் பண்பாட்டில் காணப்படுகின்றன.

திராவிடப் பண்பாட்டின் தொன்மைக் குடிகளாகத் தமிழர்கள் தங்களை உரிமைகோரி வருகின்றனர். தமிழர்களின் பண்பாட்டுத் தொன்மையானது சிந்துவெளித் திராவிட நாகரிகம் தொடங்கி இன்றுவரை நீண்ட நெடிய அறுபடாத பண்பாட்டு மரபினைக் கொண்டது. இந்தவகையில் திராவிட உறவுமுறைச் சொற்களும் தமிழர் பண்பாட்டின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றன. திராவிட உறவுமுறை ஒழுங்கமைப்பானது வடஇந்திய உறவுமுறையிலிருந்து அடிப்படையில் வேறுபட்டது என்பதினை ஐராவதி கார்வே அம்மையார் (Karve 1965:250) குறிப்பிட்டுள்ளார். தென்னிந்திய உறவுமுறைகளைப் பகுப்பாய்வு செய்த லூயி தூய்மோனும் திராவிட உறவுமுறையான இரத்த உறவு, மணவுறவு எனும் இரண்டு அடிப்படைப் பிரிவுகளைக் கொண்டது என்றும் இவற்றினுடைய உறவுமுறைச் சொற்கள் என்பது திருமணத்திற்கான விருப்பத்தினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார் (1983: 17). திராவிட உறவுமுறைச் சொற்கள் தொடர்பாக இதே கருத்தினை நூல் யால்மனும் முன்வைத்திருக்கின்றார் (Yalman 2009: 548).

தொடக்கக் காலத்தில் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதர்களிடையே கட்டுப்பாடற்ற பாலுறவு நிலவி வந்துள்ளது. பின்னர்க் குடும்பம் என்ற நிறுவனம் பாலுறவினை ஓர் ஒழுங்கமைப்பினுள் கொண்டு வந்துள்ளது எனக் குடும்பம் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். குடும்பம் என்ற அமைப்பானது ஒரே குடும்பத்தினுள்ளே பாலுறவினை மேற்கொள்வதினைத் தடைசெய்கின்றது. எனினும் கட்டுப்பாடற்ற பாலுறவுச் செயன்முறையில் வாழ்ந்த சமூகமானது திடீரென மாற்றம் அடையவில்லை. முதலில் உறவுக்குள்ளேயே பாலுறவு ஒழுங்கமைப்பினை வரையறை செய்து அதன் வழியே பாலுறவினைச் சீரமைத்தது என்பது பல ஆய்வாளர்களின் கருத்தாகும். இந்நிலையில் இவ்வகையான உறவுகளுக்குள்ளேயே பாலுறவை ஒழுங்கு செய்யும் ஓர் உறவுமுறைக் கட்டமைப்புடையதாகவே திராவிட உறவுமுறை காணப்படுகின்றது.

பக்தவத்சல பாரதி (2008: 65-67) குறிப்பிடுவது போன்று வடஇந்தியச் சமூகத்தில் குறைந்தது ஐந்து கோத்திரங்களை விலக்கியே திருமணம் செய்தல் வலியுறுத்தப்படுகிறது. அதேநேரம் உயர்சாதி ஆணுக்குத் திருமணம் செய்யும் "உயர்குலத் திருமணம்" (Hypergamy) முறையே அவர்களிடத்தில் வழக்கத்திலுள்ளது. ஆனால் திராவிட மரபில் நெருங்கிய உறவுக்குள் திருமணம் செய்யும் "முறைமணம்" (Cross-cousin marriage) விரும்பத்தக்க மணமுறையாக (Preferential Marriage) உள்ளது. இதற்குக் காரணம் இரண்டு சமூகத்தினுடைய பண்பாட்டின் அடிக்கட்டமைப்புகள் வேறுபட்டவையாக

உள்ளமையே ஆகும். வடஇந்தியப் பண்பாடானது கால்நடை மேய்த்தல் பொருளாதாரத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைந்த ஒன்று. மாறாகத் திராவிடர்களுடைய பண்பாடு விவசாயத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைந்த ஒன்றாகும்.

மேற்குறித்த பண்பாட்டு வேறுபாடுகள் வடஇந்திய, தென்னிந்தியப் பண்பாட்டில் நிலவும் உறவுமுறைக் கட்டமைப்பு, உறவுமுறைச் சொற்கள், உறவுமுறை விதிகள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அந்தவகையில் திராவிட விவசாயப் பண்பாட்டில் நிலமும் நீரும் முதன்மையானது. இவை திருமணத்தின் வழியே பிரிக்கப்பட்டுவிடாமல் இருப்பதன் பொருட்டுத் தாய்மாமன் மகள், அத்தை மகள், அக்காள் மகள் ஆகிய முறை மக்களைத் திருமணம் செய்வது விரும்பத்தக்க முறையாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. இதனால் இவ்வகையான மணஉறவுகளை வலியுறுத்தும் வகையில் உறவுமுறைச் சொற்களும், அவற்றினை வெளிப்படுத்தும் வகையில் உறவின்முறை ஒழுங்கமைப்பும் திராவிடப் பண்பாட்டில் முதன்மை பெற்றது (பக்தவத்சல பாரதி 2002: 74-75).

இந்தோ-ஐரோப்பிய உறவுமுறைச் சொற்களானவை திராவிட உறவுமுறைச் சொற்களிலிருந்து முற்றிலும் வேறுபாடுடையன. இங்குப் பெற்றோரின் உடன் பிறந்தாரின் மக்கள் (Cousins) தெளிவான நிலையில் தனித்துவமானவையாகப் பிரிக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக இந்தி மொழியில் அனைத்து ஆண்களும் (Male Cousins) சகோதரர்களாகவும் (brothers), அனைத்துப் பெண்களும் (female Cousins) சகோதாரிகளாகவும் (Sisters) கருதப்படுகின்றனர். இவர்கள் முறையே பாய் (bhai) எனவும், பாஹன் (bahen) எனவும் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் ஒருவரை ஒருவர் திருமணம் செய்ய முடியாது. அதாவது வடஇந்திய உறவுமுறைச் சொற்களானவை தென்னிந்தியாவில் உறவுக்குள் திருமணம் மேற்கொள்ளும் பண்பாட்டு மரபிலிருந்து வேறுபட்ட தன்மையினைப் பிரதிபலிக்கின்றன (Deliege, 2011:21). மேலும் இந்தியில் தந்தையின் சகோதாரியின் கணவனைத் தனிச் சொல்லாலும் (பூபா - phupha) இவர் பெண் எடுப்பவர், தாயின் சகோதரனைப் பிறிதொரு சொல்லாலும் (மாமா - Mama) இவர் பெண் கொடுப்பவர் எனவும் சுட்டப்படுகின்றது. ஆனால் தமிழில் இருவரும் ஒரே சொல்லால் (மாமா) என்று சுட்டப்படுகின்றனர் (மேலது. 21). இதற்கு வடஇந்தியாவில் இருந்துவரும் உயர்குலத் திருமணப் பண்பாட்டு முறையும் தென்னிந்தியாவில் இருந்துவரும் முறைமணத் திருமணப் பண்பாட்டு முறையும் காரணமாகும் (பக்தவத்சல பாரதி 2008: 65-67).

தமிழர் பண்பாட்டு மரபில் பங்காளி-சம்மந்தி உறவு என்பது ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. பங்காளி உறவுமுறைச் சொற்களாக அண்ணா, தம்பி, பெரியப்பா, சித்தப்பா போன்ற உறவுமுறைச்

சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதேவேளை சம்பந்தி (மாமன்-மச்சான்) உறவுமுறைகளை வெளிப்படுத்தும் உறவுமுறைச் சொற்களாக மாமா, மாமன், மாமனார், மச்சான் போன்ற சொற்கள் காணப்படுகின்றன.

பேசுநர் தன்னுடைய தந்தையினை விளிக்கும் சொல்லாலேயே தந்தையின் சகோதரர்களையும், தாயினை விளிக்கும் சொல்லாலேயே தாயின் சகோதரி களையும் விளிக்கின்றார். அங்கு வயது வேறுபாட்டினைக் காட்டுவதற்கென முன்னொட்டுச் சொற்கள் பயன்படுகின்றன. இவ்வாறே தன்னுடைய உடன் பிறப்புக்களை விளிக்கும் சொற்களினாலேயே தந்தையின் சகோதரியினுடையதும், தாயின் சகோதரியினுடையதும் பிள்ளைகளை விளிக்கின்றார். இந்தச் சொற்கள் திருமணத் தவிர்ப்புறவினை (Proscriptive alliance) வெளிப்படுத்துகின்றன. மாறாகத் தந்தையின் சகோதரியினையும் அவர்களுடைய கணவன், பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரர் அவர்களுடைய மனைவி மற்றும் பிள்ளைகளைத் தனித்துவமான 'முறை' உறவுச் சொற்களினால் விளிக்கின்றார்கள். இந்நிலையில் இவை திருமணத்திற்கான முறை உறவினையும், உரிமையினையும் (Prescriptive alliance) நேரடியாகவே வெளிப்படுத்துகின்றன. இதன் பின்புலத்தில் அன்றாட உறவு முறைச் சொல்லாடல்களை நோக்கினால் இவை மேலும் புரியும். 'நான் என்ன உன் மாமனா? அல்லது மச்சானா?' என்று பெண்பிள்ளைகளுக்கும் 'நான் என்ன உன் அக்கா பொண்ணா?' அல்லது மச்சாளா?' என்று ஆண்பிள்ளைகளுக்கும் கேட்பது இங்கு நினைவுகொள்ளத்தக்கது.

லூயி தூய்மோனின் 'மாமன் முறை உள்ளவருக்கு மாமனாக அமைபவர் அண்ணன் தம்பி உறவாக அமைவார்கள்' (சம்பந்திக்குச் சம்பந்தி பங்காளி - Affine's affine as kin) என்னும் கோட்பாடானது திருமணத்தின் பின்னரான உறவுச் சொற்களும் ஏற்கெனவே நிலவிவருகின்ற பண்பாட்டின் தொடர்ச்சியாகவே அமைகின்றது. என்பதனை விளக்குகின்றது. அண்மைக் காலத்தில் உறவினர் அல்லாதவர்களுடனான திருமணத்தில் அக்காவைத் திருமணம் முடித்தவராயின் 'மாமா' என்றும் தங்கையினைத் திருமணமுடித்தவராயின் 'மச்சான்' என்றும் அழைக்கும் முறை உறவுமுறையில் திராவிடப் பண்பாட்டின் நீட்சியினையே காட்டுகின்றது. இந்நிலையில் லூயி தூய்மோனின் 'திராவிட உறவுமுறைச் சொற்கள் உயர்ந்தளவில் ஒழுங்கமைக்கப்பட்டன; அனைத்து உறவுமுறைச் சொற்களும் இருபக்க மணவுறவினைக் குறிப்பாகப் பொருள் உணர்த்தும் வகையில் காணப்படுகின்றன; உறவுகளை ஓர் ஒழுங்கில் வைத்திருப்பதற்கு இவ்வகையான இருபக்கத் திருமணச் சடங்குகளும் அவசியமானவை' என்னும் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது (Quated by Yalman *2009: 548*).

தமிழர்களின் மூன்று தலைமுறைகளுக்கு இடையிலான உறவுமுறைச் சொற்கள் அனைத்தினையும் 'பிரித்தல்-இணைத்தல்' (Bifurcate - Merging) எனும் இரண்டு பொருண்மைகளின் அடிப்படையில் நோக்கலாம். அதாவது

மணவுறவினை மேற்கொள்ளக் கூடியவர்களைத் தனிச் சொற்களாலும், மணவுறவிலிருந்து விலக்கப்பட்டவர்களைப் பொதுவான சொற்களாலும் குறிப்பிடும்முறை காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணையின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளலாம்.

அட்டவணை 1.

யாழ்ப்பாணப் பிரதேசத்துக் கரையார் சமூகத்தினரது உறவுமுறைச் சொற்கட்டமைப்பு

ஆண் உறவுகள்			பெண் உறவுகள்				தலைமுறை
அப்பப்பா, அம்மப்பா (தாத்தா)			அப்பம்மா, அம்மம்மா (பாட்டி)			+2	
நேர் முறை உறவு (parallel cousin)		எதிர் முறை உறவு (cross cousin)	நேர் முறை உறவு (parallel Cousin)		எதிர் முறை உறவு (cross cousin)		
1. பெரிய	அப்பா	3. மாமா	4.பெரிய	அம்மா	6. அத்தை	+1	
2. சித்த			5.சின்ன (சித்தி)				
7. அண்ணா		8. அத்தான்	9. அக்கா		10. மச்சாள்	+0	
பேசுநர்						0	
11. தம்பி		12. மச்சான்	13. தங்கை		14. மச்சாள்	-0	
15. மகன்		16. மருமகன்	17. மகள்		18. மருமகள்	-1	
பேரன்			பேத்தி			-2	

மூலம்: களாய்வு

அட்டவணை 2.

புதுச்சேரி பிரதேசப் பட்டினவர் சமூகத்தினரது உறவு முறைச் சொற்கட்டமைப்பு

ஆண் உறவுகள்			பெண் உறவுகள்				தலைமுறை
தாத்தா			ஆயா			+2	
நேர் முறை உறவு (parallel cousin)		எதிர் முறை உறவு (cross cousin)	நேர் முறை உறவு (parallel Cousin)		எதிர் முறை உறவு (cross cousin)		
1. பெரிய	அப்பா	3. மாமா	4.பெரிய	அம்மா	6. அத்தை	+1	
2. சித்த			5.சின்ன (சித்தி)				
7. அண்ணா		8. மைத்துனர்	9. அக்கா		10. அண்ணி	+0	
பேசுநர்						0	
11. தம்பி		12. மச்சான்	13. தங்கை		14. மச்சினிச்சி	-0	
15. மகன்		16. மருமகன்	17. மகள்		18. மருமகள்	-1	
பேரன்			பேத்தி			-2	

மூலம்: பக்தவத்சலபாரதி 1999: 151-152

மேலுள்ள இரண்டு அட்டவணைகளும் முறையே இலங்கை, இந்தியப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சமூகத்தினரது உறவுமுறைச் சொற்கட்டமைப்புக்களை வெளிப்படுத்துகின்றன. இவ்விரண்டு சமூகத்தினுடைய உறவுமுறைச் சொற்கட்டமைப்பும் திராவிட உறவுமுறைச் சொற்களினைப் பிரதிபலித்தாலும் இவற்றுள் பிராந்தியப் பண்பாட்டுத் தனித்துவத்தினை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் தமிழர்களிடையே நிலவிவரும் உறவுமுறைச் சொற்களும் திராவிடப் பண்பாட்டுக்கு உரியன (Stirrat, 177: 271). ஆனால் அங்கு அக்காள் மகளைத் திருமணம் செய்யும் முறை பண்பாட்டில் இல்லாத காரணத்தினால் அக்காவைத் திருமணம் செய்யும் நபரை 'அத்தான்' என்றே அழைக்கும் மரபு யாழ்ப்பாணக் கரையார் சமூகத்தினரிடம் காணப்படுகின்றது. ஆனால் பட்டினவர் மத்தியில் அக்காவைத் திருமணம் செய்யும் நபரை 'மாமா' என்று பொதுவாக அழைக்கும் முறை காணப்படுகிறது. இது அக்கா மகளைத் திருமணம் செய்யும் பண்பாட்டு மரபின் வெளிப்பாடாகும். இவ்வாறே ஈழத்தமிழர் பண்பாட்டில் தாய்வழிச் சமூகமுறையின் எச்சக் கூறாகத் திருமணத்திற்குப் பின்னரான உறைவிடம் என்பது மணமகள் வீடு காணப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகவே மகளின் கணவனை 'மருமகன்' என்று சுட்டும் முறை காணப்படுகின்றது. தென்னிந்தியாவில் 'மாப்பிள்ளை' என்று சுட்டும் வழக்கம் நிலவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப்பாணத்தில் கற்கோவளக் கிராமத்தில் இரண்டாம் தலைமுறையினரிடத்தில் (50 வயதிற்கு மேல்) மேற்கொள்ளப்பட்ட களாய்வில் அவர்கள் தங்களுடைய 'தந்தை'யை 'ஐயா' என்றே சுட்டுகின்றனர். அவர்களிடையே 'அப்பா' என்ற சொல் பயன்பாட்டில் இல்லை. அப்பா என்ற சொல் இளந் தலைமுறையினரிடம் காணப்படுகின்றது. இங்கு இடம்பெற்ற பண்பாட்டியல் மாற்றம் ஓர் ஆய்வுக்குரிய விடயம். எனினும் உறவுமுறைச் சொற்களில் பண்பாட்டின் தாக்கம் நிகழ்ந்திருப்பதினை இது வெளிப்படுத்துகின்றது. மொழியின் மீதான பண்பாட்டின் தாக்கமாக இதனைக் கருதமுடியும். அப்பா என்ற சொல்லுக்குப் பதிலியாக ஐயா பயன்படுத்தப்பட்டதால் பெரியையா, சின்னையா, குஞ்சியை, ஐயாம்மா, ஐயாப்பா போன்ற சொற்களும் அவர்களிடம் இருந்துள்ளமை இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கது.

தொகுத்து நோக்கினால் உறவுமுறைச் சொற்களானவை பேச்சு வழக்கம் மட்டுமல்ல இவை நடத்தைமுறை சார்ந்த வழக்கமும் ஆகும் (Quated by Deliege, 2011:18). மேலும் உறவுமுறைச் சொற்களுக்கும் சமூகக் கட்டமைப்புக்கும் இடையிலான தொடர்புகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர்கள் பலரும் இரண்டுக்கும் இடையில் மிகநெருங்கிய தொடர்பு இருப்பதினை வலியுறுத்திக் கூறுகின்றனர் (மேலது, 19). இந்நிலையில் ஒன்றுடன் ஒன்று இணைந்த மொழியும் பண்பாடும் தம்மிடையே பரஸ்பரமான இடை வினைகளை மேற்கொண்டு

மொழியின் கட்டமைப்பினைத் தீர்மானித்ததுடன், புதிய சொற்களின் உருவாக்கத்திலும் பங்கெடுத்துக் கொள்கின்றன. தமிழர் பண்பாட்டினுடைய சிறப்பியல்புகளை மட்டுமன்றிப் பிராந்தியப் பண்பாட்டின் தனித்துவத்தினையும் வெளிப்படுத்தும் ஒன்றாகவே திராவிட உறவுமுறைச் சொற்கள் காணப்படுகின்றமையினை இவ்வாய்வின் வழியே நோக்க முடிகின்றது.

துணை நூல்கள்

1. பக்தவத்சல பாரதி, *தமிழர் மானிடவியல்*, புத்தாநத்தம்: அடையாளம், 2008.

2. Bharathi, Bhakthavatsala, S.*Coromandel Fishermen: An Ethnography of Pattanavar Subcaste*. Puducherry: Pondicherry of Linguistics and Culture,1999.

3. Deliege, Robert. *Anthropology of the Family and Kinship* (2nd Edition). New Delhi: PHI Learning Pvt. Ltd, 2011.

4. Dumont, L. "The Dravidian kinship terminology as an expression of marriage", *Man* 53: 34–9. 1953.

5. Dumont, Louis. *Affinity as a Value: Marriage Alliance in South India, with Comparative Essay on Australia*. Chicago: The University of Chicago Press, 1983.

6. Karve, Irawati. *Kinship Organization in India*. Delhi: Munshiram Monoharlal,1965 (1953).

7. Murphy, Robert, F. *Cultural and Social Anthropology: An Overture* (3rd Edition) New Jersey: Prentice Hall, 1989 (1979).

8. Stirrat, R. L. "Dravidian and non-Dravidian kinship terminologies in Sri Lanka". *Contributions to Indian Sociology*, Vol. 2, No. 2: 271 – 293, 1977.

9. Trautmann, Thomas. *Dravidian Kinship*, Cambridge: Cambridge University Press. 1981.

10. ___________ *The Clash of Chronologies: Ancient India in the Modern World*. New Delhi: Yoda Press.2009.

11. William, Thomas r. *Cultural Anthropology*. New Jersey: Prentice Hall.1990.

12. Yalman, Nur.*"The Structure of the Sinhalese Kindred: A Re-Examination of the Dravidian Terminology"*. *American Anthologist* Vol. 64. Issues 3: 548 – 575.2009.

பெரியாழ்வார் பாசுரங்களில் கேட்பொலி செவிப்புலக் காட்சிப் படிமங்கள்

தி. கமலி

பாலின நோக்கு

மொழிக்கு அடிப்படை ஒலி. இறைவன் படைப்புகள் அனைத்துமே ஒலி எழுப்புவதன் மூலம் தாம் உயிருடன் இருத்தலை உலகுக்கு உணர்த்துகின்றன. காற்றில் மரங்கள் சலசலக்கும் . அலைகடல் திரை ஒலியின் ஓயாத சங்கநாதம். சருகுகள் கலகலக்கும். கொட்டும் மலையருவியின் ஓசை தித்திக்கும். பறவைகள் கீச்சிடும். வண்டுகள் ரீங்கரிக்கும். விலங்குகள் கர்ச்சிக்கும். இயற்கை இடி, மின்னல், மழையென முழங்கும். மனிதர்கள் பேசுவர். சிரிப்பர். ஆர்ப்பரிப்பர். கைதட்டி மகிழ்வர். இசைப்பர். பாடுவர். ஆடுவர். பள்ளிகளில் வகுப்பறைகளைக் குழந்தைகளது பேச்சொலி நிறைக்கும். மணிஒலிக்கும். இதயத்துடிப்பு, நாடித்துடிப்பு, கடிகாரத் துடிப்பு என்று எல்லா ஒலிகளும் தாள கதியில் ஒலிப்பதைக் காலக்கண்ணாடி பதிவு செய்யும். ஒலி இல்லாத இயக்கமில்லை. இயக்கம் இல்லாத உலகு இல்லை.

ஒலி இயற்பியலில் ஒரு பாடப்பகுதி. ஒலி அலைகள் துல்லியமாக அறிவியலில் கணக்கிடப்படுகின்றன. அதிர்வெண்கள் ஒலி அலைகள் பயணிக்கும் வேகத்தைக் குறிக்கின்றன. ஒலிப்பரவல், ஒலி அதிர்வுகள் வானொலித் தொடர்பில் இன்றியமையாத இடம் வகிக்கின்றன. ஒலி எட்டும் தூரத்தைக் கணக்கிட்டு ஒலியலைகள், 'சிற்றலைகள் பண்பலைகள் மத்திய அலைகள் நீள அலைகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. ஒலியலைகள் குறியீடுகளாகப் பகுக்கப்பட்டுக் கடத்தப்படுகின்றன. மின் காந்தப்புல உதவியுடன் ஒலிப்பேழைகளாக, ஒலிநாடாக்களாக, ஒலி வட்டுக்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. ஒலிப்பான்களால் அதிகரிக்கப்படுகின்றன. ஒலி பெருக்கிகளால் கூட்டவோ, குறைக்கவோ செய்யப்படுகின்றன. ஒலிப்பதிவு, ஒலித்தடம், ஒலிப்பயணம் பற்றிய பாடம் ஒலிபொறியியல் ஒலித்தடத்தில் ஏற்படும் இடையூறு 'வெள்ளைச் சத்தம்' ஒலிப்பயணத்தில் விடுபடும் ஒலிகள்

பற்றித் துல்லிய கணக்கீடுகள் உள்ளன. பிழைகளற்ற ஒலி தொடர்பியல் குறித்த அறிவியல் ஆய்வுகள் நடைபெற்ற வண்ணமே உள்ளன. மனித ஒலி, பேச்சொலி, கேட்பொலி, ஒலி உறுப்புகள், ஒலிப்பு முறைகள் பற்றிய மொழியியல் ஒலி ஒலியன், ஒலியனியல் கேட்பொலியியல் கணினி மொழியியல் பற்றித் துல்லியமாகப் பரிசீலிக்கும் கணினி மொழி ஆய்வகங்கள் பல்கலைக்கழகங்களில் பெருகி உள்ளன.

ஒலிநுட்ப வகுப்பறைகள் ஒலித்தகவமைவுடன் உருக்காட்சிகளைத் தோற்றுவிக்கின்றன. இத்தகு மின்னணு ஊடக ஒலியறிவியல் நுட்ப வளர்ச்சி எழுச்சி பெற்றுள்ள சூழலில், 'பெரியாழ்வார் பாசுரங்கள் முன்னிறுத்தும் கேட்பொலி செவிப்புலக் காட்சிப் படிமங்களைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது.

குழந்தைக் காட்சிப் படிமம்

வண்ணமாடங்கள் சூழ்ந்த திருக்கோட்டியூரில் கண்ணன், கேசவன், நம்பி பிறக்கின்றான். எண்ணெய், சுண்ணம் எதிரெதிர் தூவிடக் கண்ணன் முற்றம் கலந்து அளறு ஆயிற்று.

ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குத்தான் என்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே

(பெரியாழ்வார், முதல் திருமொழி, 14.1-4)

பிள்ளையைக் காணத் தாம் புகுவார். ஆண் ஒப்பார் இவன் நேரில்லை காண், திருவோணத்தான் உலகாளும் என்பார்களே! பார்க்கத் தவிக்கும் நெஞ்சினரது செயல்களது தொடர்ந்த விவரிப்பின் மூலம் காட்சிப்படுத்துகின்றார் பெரியாழ்வார்.

குளிப்பாட்டும் காட்சிப் படிமம்

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நா வழித்தாளுக்கு அங்காந்திட
வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே

(பெரியாழ்வார், முதல்திருமொழி,18.1-4)

பிறந்த சிறு குழந்தையின் கையையும், காலையும் ஊன்றி நிமிர்த்து இதமான சுடுநீரில் மெதுவாக நீராட்டி, குழந்தையின் நாக்கைச் சிறு மஞ்சளால் வழித்த அன்னை முன் அங்காந்த குழந்தை வாயினுள் உலகம் ஏழையும் கண்டவள் அசோதை. இப்பாசுரத்தின் தொடர் செயல் வர்ணனை ஒலிகள் வாசிக்கும் அனைவரையும் உணரச் செய்துவிடுகின்றன.

துள்ளல், துடிப்பு, துறுதுறுப்பு, களிப்பு மிக்க குழந்தைகள் பிரபஞ்சத்தில் உயிர்ப்பையும், ஜீவனையும் கொண்டு வருகின்றன. வாழ்விற்குப் பொருள் தருகின்றன. இன்பப் பெருக்கின் இனிய ஊற்றுக்கண்கள். 'பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா ஓசை தரும் இன்பம் உவமை இல்லா இன்பம் அன்றோ' சுட்டிக் குழந்தையின் துடிப்பை வாசிக்கும்படி கட்டித் தழுவி மெய் சிலிர்க்கும் வண்ணம் பெரியாழ்வார் காட்சிப்படுத்தும் படிமமிது.

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கு இலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்
(பெரியாழ்வார், முதல் திருமொழி, 21.1-4)

அழகுக் குழந்தையின் தோற்றப் படிமம்

அமுதன்ன தேவகி அசோதைக்குப் போத்தந்த பேதைக் குழவி கண்ணன் பிடித்துச் சுவைத்து உண்ணும் பாதக் கமலங்கள் காணீரே, பவள வாயீர் வந்து காணீரே' என்று பாதத்தில் தொடங்கிக் கண்ணன் திருமேனி அழகைப் பாதாதி கேசமாய் இருபது பாசுரங்களில் ஒலிக்கும் அழகுத் தமிழ்ச் சொற்களால் பதிவு செய்துள்ளார்.

நோக்கி அசோதை நுணுக்கிய மஞ்சளால்
நாக்கு வழித்து நீராட்டும் இந்நம்பிக்கு
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்
மூக்கும் இருந்தவா காணீரே! மொய்குழலீர் வந்து காணீரே!
(பெரியாழ்வார், முதல் திருமொழி, 37.1-4)

குழந்தைக் கண்ணனை யசோதை நீராட்டுகின்றாள். மஞ்சளால் நாக்கு வழிக்கின்றாள். குழந்தையின் வாக்கு, நயனம், வாய், முறுவல், மூக்கு இருக்கின்ற அழகைப் பாருங்கள்! மொய்குழலீர் வந்து காணுங்கள் என்று விவரித்துப் பெரியாழ்வார் அழைக்கும் போது இப்பாசுரத்தைப் பாடி

மகிழ்வோரும் சென்று கண்ட ஆய்ச்சிகளாக ஆவர். அசோதையாக மடிமேல் இருத்தி அழகைக் காண்போர் பெரியாழ்வாராக மாறி அழகில் பேதலித்துச் சிலிர்ப்பர்.

அழும் குழந்தையின் காட்சிப் படிமம்

குழந்தை வளர வளர அதைக் குளிப்பாட்டுவது கடின செயலாகிறது. குழந்தையும் அழுகிறது. குளிப்பாட்ட எல்லாம் எடுத்து வைத்த பிறகு, அழும் குழந்தையைச் சமாதானம் செய்து குளிக்கச் செய்ய வேண்டும். குளித்தபின், புதுமலர் போல் குழந்தை அமைதியாக, ஆழ்ந்து, ஆனந்த உறக்கம் கொள்ளும் அழகு அமைதி நிறைந்த தனித்த அழகு ஆகும்.

மெய் திமிரும் நானப் பொடியோடு மஞ்சளும்
செய்ய தடங்கண்ணுக்கு அஞ்சனமும் சிந்துரமும்
வெய்ய களைப்பாகி கொண்டு உவளாய் நின்றாள்
ஐயா! அகழல்! அழேல்! தாலேலோ! அரங்கத்தணையானே! தாலேலோ!
(பெரியாழ்வார், முதல் திருமொழி, 52.1-4)

குழந்தை அழுவது கண்டு மனம் பொறுக்காமல், பதைத்து, 'அழேல்! அழேல்! என்று மீண்டும், மீண்டும் கூறிச் சமாதானம் செய்யும் பெரியாழ்வார் பாடலின் வழி அழும் குழந்தையைக் காட்சிப்படுத்துகிறார்.

கை நீட்டிச் சந்திரனை அழைக்கும் குழந்தை

அழகிய நிலாமுற்றம். தாயின் இடுப்பில் குழந்தைக் கண்ணன். நிலவோ மேகங்கள் ஊடே மறைந்தும், வெளிப்பட்டும், நகர்ந்து செல்வது போல் தோன்றுகிறது.

அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுறா
மழலை முற்றாத இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான்
குழகன் சிதரன் கூவக் கூவ நீ போதியேல்
புழையில் வாகாதே நின் செவி புகர் மாமதீ!
(பெரியாழ்வார், முதல் திருமொழி, 58.1-4)

அமுதம் ஊறும் வாயால் தெளிவற்ற மழலைச்சொல் இசைத்து நிலவைக் கண்ணன் கூப்பிடுகிறான். காதில் வாங்காமல் நிலவு போகிறது. பெரியாழ்வார் சினக்கிறார். நிலவின் செவிக்குக் கேட்கும் துளை உள்ளதா

இல்லையா என்று கண்ணன் அழைப்பதைக் காதில் வாங்காமல், ஆழ்வாரிடம் திட்டு வாங்கிய நிலவுதானே நீ' என்று இங்குக் காட்டுகிறார் பெரியாழ்வார்.

